Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 029 | வெள்ளிக்கிழமை | மார்கழி 10ஆம் நாள் 25 டிசெம்பர் 2020 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

வாசகர்கள், விளம்பரதாரர்கள், முகவர்கள் அனைவருக்கும் உதயனின் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்.

# தனிமைப்படுத்தலை இறுக்க இராணுவம், பொலிஸ் களத்தில்



நத்தார் தின திருப்பலி யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்தில் யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருள் திரு கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நேற்று இரவு ஒப்புக் கொடுக்கப்பட்டது. (எ-7)

## யாழ். மாவட்டச் செயலக கூட்டத்தில் நேற்றுத் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 25

யாழ்ப்பாண மாவட்டத்தில் தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் வெளியில் நடமாடாதவாறு இராணுவம் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் கண்காணிப்பதற்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 19

## பூட்டு

கொழும்பு, டிசெ.25

நாடளாவிய ரீதியில் இன்று அனைத்து மதுபான நிலையங்களும் மூடப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று கிறி 19



## 'உதயன்' மீதான வழக்கு அடக்குமுறையின் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.25

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் படத்தையும், சொற்களையும் பிரசுரித்தமைக்காக "உதயன் பத்திரிகை மீது, யாழ்ப்பாணம் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ள நிலையில், அதற்கு பல தரப்புகளில் இருந்து கடும் எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

"உதயன் பத்திரிகை மீதான இந்த வழக்குப் பதிவு, ஊடகங்கள் மீதான அடக்குமுறையின் ஆரம்பம் என்று பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

### ஜனநாயக விரோதம்



கொழும்பு, டிசெ.25

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு, ஊடகங்களை அடக்க முயற்சி 19

### சர்வாதிகாரம்



கொழும்பு, டிசெ.25

சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணரும் 'உதயன்' பத்திரிகை 19

## எம்.ஓ.எச். பணிமனைக்குள் புகுந்த வர்த்தகர் அடாவடி!

### காரைநகரில் சம்பவம் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 25

காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தினுள் புகுந்து காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரியை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் வர்த்தகர் ஒருவருக்கு எதிராக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் 19

## எம்.ஜி.ஆர். நினைவு தினம்

யாழ்ப்பாணம், டிசெ.25

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும், நடிகருமான எம்.ஜி.ஆரின் (எம்.ஜி. இராமச்சந்திரன்) 33ஆவது நினைவு தினம் நேற்றாகும். நினைவு தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றன.

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டில் 19

## கொத்தமல்லி போர்வையில் உக்ரேய்ன் விவசாயக் கழிவு

கொழும்பு, டிசெ.25

உக்ரைனில் இருந்து கொத்தமல்லி என்று தெரிவிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களில், விவசாயக் 19

## விடுதி சுற்றிவளைப்பு நால்வர் நேற்று கைது!

யாழ்ப்பாணம், டிசெ.25

யாழ்ப்பாணம், பொற்பதிப் பகுதியில் விடுதி ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு, 19

## விலங்குக்கு வைத்த பொறி சிப்பாய் உயிரைப் பறித்தது!

வவுனியா, டிசெ.25

வவுனியா மகாகச்சக்கொடி அலுத்வத்த பகுதியில் பாதுகாப்பற்ற மின் இணைப்பில் சிக்கி சிவில் பாதுகாப்புப் படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று மாமடுவ பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது. 19

## ஓட்டோ தடம்புரண்டு இளைஞன் உயிரிழப்பு

கிளிநொச்சி, டிசெ.25

முச்சக்கரவண்டி கட்டுப்பாட்டை இழந்து கால்வாய்க்குள் தடம்புரண்டதால், அதன் சாரதி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது.

ஆ.தட்சாயினன் (வயது-27) 19

GNANAMS HOTEL & RESTAURANT

No.299, 300 Clock Tower Road, Jaffna, Sri Lanka.

RICE & CURRY

- Vegetable Rice & Curry 180.00
- Chicken Rice & Curry 280.00
- Egg Rice & Curry 230.00
- Fish Rice & Curry 200.00

For Orders 076 222 0632 / 074 084 0631 / 021 222 0630 / 021 222 0631

# ஊடக அடக்குமுறையை உடன் நிறுத்துங்கள்!!!

### ராஜபக்ச அரசை எச்சரிக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ்

**மன்னார், டிசெ. 25**

**ஊடக அடக்குமுறையை அரசு உடன் நிறுத்த வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.**



அத்துடன் உதயன் பத்திரிகை மீதான வழக்குப் பதிவுக்கும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனது ஒளிப்படத்தையும் சொற்களையும் பிரசுரித்தமைக்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொலிஸாரால் 'உதயன்' பத்திரிகை மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது.
ராஜபக்ச அரசின் ஆட்சிக் காலத்தில் பல தமிழ் மற்றும் சிங்கள ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளார்கள். இதை எவரும் மறந்து விடவில்லை. தமிழ் மக்களுக்காக போராடிய ஒரு தலைவரின் ஒளிப்படத்தை பிரசுரித்தது எவ்வாறு தவறாகும்? அரசுடைய தவறான செயற்பாடுகளை பொதுமக்கள் மத்தியில் கொண்டு போய் சேர்த்துக் கொண்டிருக்கின்ற ஊடகங்கள் மீது அழுத்தம் கொடுப்பது என்பது ஊடக சுதந்திரத்தை அழிப்பதற்காகவும் கட்டுப்படுத்துவதற்காகவும் செய்யப்படுகின்றது. இந்த அரசு கடந்த கால தவறுகளிலிருந்து விடுபட்டு ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் வகையில் நடந்து கொள்ள வேண்டும், என்றார்.

(ஒ.213)

## பிரபாகரனின் படம் பிரசுரித்ததை சவாலுக்கு உட்படுத்த முடியாது

### உதயன் மீதான ஊடக ஒடுக்குமுறையை கண்டிக்கின்றார் சிறிதுங்க ஜயசூரிய

யாழ்ப்பாணம், டிசெ. 25



ஊடக சுதந்திரத்தை ஒடுக்கும் வகையில் செயற்படும் யாழ்ப்பாணம் பொலிஸாரின் நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று ஐக்கிய சோஷலிசக் கட்சி அறிவித்துள்ளது.
உதயன் பத்திரிகைக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அந்தக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய இவ்வாறு கண்டனத்தை வெளியிட்டார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
உயிரிழந்த நபரொருவரின் படத்தை பத்திரிகையில் பிரசுரிப்பது தவறல்ல. அது யாராக இருந்தாலும் அதனை சவாலுக்குட்படுத்த முடியாது என்பதுடன் அதனை பயங்கரவாத நடவடிக்கையாக கருதவும் முடியாது. ஒருவரை பற்றி விமர்சித்தோ அல்லது அவர் தொடர்பான தகவல்களை வெளியிடும்போதோ, படங்களை பிரசுரிப்பதென்பது ஊடக தர்மம், கலாசாரம். இதுகூட தெரியாமல் பொலிஸார் செயற்படுவது வெட்கக்கேடாகும்.
பொலிஸ் துறைக்கு பொறுப்பாக இருக்கும் அமைச்சர் கூட தற்போது சட்டதிட்டம் தெரியாமலேயே செயற்பட்டு வருகின்றார். சந்தேக நபர்களின் படங்களை வெளியிடவேண்டும் என்று கூறுகின்றார். இது அவரின் அறிவின்மையின் வெளிப்பாடாகும். தற்போது சரத் வீரசேகரவுக்கு கீழ் உள்ள பொலிஸார் ஊடகங்களில் படம் வெளியானால் அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கின்றனர். இது கண்டித்தக்க விடயமாகும், என்றார். (ஒ.44)

## மிகப் பெரிய ஊடக ஒடுக்குமுறையின் ஒத்திகையே உதயன் மீதான வழக்கு

### அருட்தந்தை சக்திவேல் காட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 25




ஊடக தணிக்கை மற்றும் ஒடுக்குமுறைக்கு தயாராகும் அரசு அதற்கான ஒத்திகையை வடக்கில் பார்க்கின்றது.
இதன் ஓர் அங்கமாகவே உதயன் பத்திரிகைக்கு எதிராக பொலிஸார் செயற்பட ஆரம்பித்துள்ளனர். நாளை தெற்கிலுள்ள ஊடகங்களுக்கும் இதே நிலைமை வரலாம்.
எனவே, அரச பயங்கரவாதத்துக்கு எதிராக அனைத்து சக்திகளும் ஓரணியில் திரளவேண்டும்.
இவ்வாறு சமூகசெயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் செயற்பாட்டாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் அறைகூவல் விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி வடக்கு மக்கள் அனைத்து வழிகளிலும் ஒடுக்கப்பட்டு வருகின்றனர்.
அப்பகுதிகளில் உள்ள ஊடகங்களுக்கு எதிராகவும் அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்படு கின்றன. இத்தகைய நடவடிக்கைகளின் ஓர் அங்கமாகவே உதயனை சீண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. நினைவேந்தல் நடத்தமுடியாது, மாவீரர் நாளை கடைப்பிடிக்க முடியாது, ஏன் சுனாமி நினைவேந்தலைக்கூட செய்யமுடியாது என்று தடைவிதிக்கப்படும் காலகட்டம்தான் இது.
பிரபாகரனை கொன்றுவிட்டோம் என்று அறிவித்த பிறகு ஏன் அவரின் படத்துக்கு அஞ்ச வேண்டும்? படத்தை பிரசுரித்த பத்திரிகை ஆயுதம் தூக்குமாறு வன்முறையைத் தூண்டவில்லை. தகவல் வழங்க வேண்டியது ஊடகத்தின் பொறுப்பு. அதனை வாசகர்கள் தெளிவாக புரிந்து கொள்வதற்கு படங்கள் பிரசுரிப்பது ஊடக நெறிமுறை. அதில் உள்ள தவறு என்ன?
அடக்குமுறைகளுக்கு வடக்கில்தான் எப்போதும் ஒத்திகை பார்க்கப்படும். இதற்கு தெற்கில் இருந்து எதிர்ப்புகள் கிளம்புவது குறைவு.
அதன்பின்னர் தெற்கிலும் தலைவிரித்தாடும். தற்போதும் அதேபோன்றதொரு நிலைமை உருவாகியுள்ளது. இதற்கு எதிராக தெற்கிலுள்ள ஊடகங்களும் குரல் கொடுக்கவேண்டும், என்றார். (ஒ.44)



## வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறுகிறது

### உதயன் மீதான வழக்குக்கு செல்வம் எம்.பி. கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், டிசெ. 25

கடந்த மாதம் 26ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிர பாகரனது ஒளிப்படத்தையும் சொற்களையும் பிரசுரித்தமைக்காக யாழ்ப்பாண பொலிஸார் உதயன் பத்திரிகை மீது வழக்கு பதிவு செய்துள்ளமைக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
ராஜபக்ச அரசு தமிழ் மக்களின் மீதான அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கிறது. சிங்கள பேரினவாதத்தின் உண்மை முகம் மீண்டும் வெளியில் தெரிய ஆரம்பித்துள்ளது. பூதத்துக்கு தேவதை வேஷம் போட்டு ராஜபக்ச அரசை ஆட்சிப் பீடம் ஏற்றியவர்கள் இன்னும் ஆதரவு கொடுத்துக் கொண்டிருப்பவர்கள் இதற்குப் பதில் சொல்லவேண்டும்.
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு என்று பெயரளவில் இருந்தால் மட்டும் காணாது. அதை செயற்படுத்த வேண்டும். ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றாகக் கருதப்படும் பத்திரிகைத்துறை அடக்கப்படுவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. வடபகுதி தமிழ் மக்களின் போர்க்கால துன்பங்களை சவால்களுக்கும் உயிர் அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் எடுத்துரைத்த உதயன் பத்திரிகை மீது மீண்டும் அடக்குமுறையை ஏற்படுத்துவதை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.
தமிழர்களின் நியாயமான போராட்டத்தை தலைமையேற்று நடத்திய தலைவர் பிரபாகரனின் ஒளிப்படத்தை செய்தியாக வெளியிட்டிருந்தார்கள். அது அவர்களின் பத்திரிகை சுதந்திரம். தலைவர் பிரபாகரனின் பெயரை உச்சரிப்பது தவறு எனில் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் எத்தனையோ பேர் அவரின் பெயரை உச்சரிக்கின்றார்கள். ஏன் வழக்குத் தாக்கல் செய்த பொலிஸார் கூட அவரின் பெயரை உச்சரித்தே வழக்குத் தாக்கல் செய்துள்ளார்கள். அனைவரையும் கைதுசெய்ய முடியுமா?
அரசு ஏன் இன்று அவர்களை நினைத்து அச்சம்கொள்ள வேண்டும்? ராஜபக்ச அரசின் மனதில் குற்ற உணர்ச்சி உள்ளது. அதை மறைப்பதற்காக வேதாளம் போல் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறி பத்திரிகைத் துறையை அடக்கி ஒடுக்க நினைப்பது எப்பொழுதும் ஏற்றுக்கொள்ள முடியாது, என்றுள்ளது. (ஒ.213)

# உதயன் மீதான வழக்கை பொலிஸார் மீளப்பெறவேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவினர்களின் சங்கம் கோரிக்கை

**யாழ்ப்பாணம், டிசெ. 25**

**ஏனைய நாடுகளின் மரியாதைக்குரியதாக இலங்கை இருக்கவேண்டுமானால், உதயன் பத்திரிகை மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கை உடனடியாக மீளப்பெறவேண்டும். இவ்வாறு வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொண்டு வரும் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
ஜனநாயகத்தின் சீரான செயற்பாட்டுக்கு பத்திரிகைச் சுதந்திரம் முக்கியமானது.
உலகில் நடக்கும் நிகழ்வுகளைப் பற்றி மக்கள் சமூக விழிப்புடன் இருப்பது முக்கியம். அரசை விமர்சிக்கும் அதிகாரம் இருக்க வேண்டும். இது அரசின் நிர்வாகத்தை சிறப்பாக நடத்த உதவும்.
பத்திரிகைச் சுதந்திரம் என்பது நிகழ்வுகளின் எதிரெதிர் கருத்துக்களை வெளிப்படுத்தலாம் என்பதாகும். ஒவ்வொரு பக்கமும் தமது அச்சு ஊடகம் மூலம் மற்றவர்களை நம்ப வைக்க முயல்வது ஜனநாயகத்தில் உள்ள சுதந்திரமாகும்.
அமெரிக்காவின் அரசமைப்பில் கட்டுமட்டில்லா பத்திரிகை சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. அது அங்கு உத்தரவாதமளிக்கப்பட்ட உரிமையாக உள்ளது. அமெரிக்க ஜனாதிபதியை விமர்சித்து கட்டுரையை எழுத பத்திரிகையாளனுக்கு உள்ள உரித்து அந்த நாட்டின் பத்திரிகை சுதந்திரத்தை எடுத்துக் காட்டுகின்றது.
இலங்கையானது பிற நாகரீக நாடுகளின் மரியாதையை விரும்பினால், அவர்கள் உடனடியாக 'உதயன்' பத்திரிகை மீது பொலிஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை மீளப்பெற வேண் டும், என்றுள்ளது. (ஒ.110)

# ஊடக அடக்குமுறையின் உச்சபட்ச வடிவம்!

## உதயன் மீதான வழக்குக்கு செ.மயூரன் கண்டனம்

வவுனியா, டிசெ. 25
தமிழ்த் தேசிய நாளிதழாக வெளிவந்து கொண்டிருக்கும் உதயன் பத்திரிகை மீது வழக்கு தொடுக்கப்பட்டிருப்பது கண்டனத்துக்குரியது. இது உச்சபட்ட ஊடக அடக்குமுறையின் ஒரு வடிவமே. இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் செ.மயூரன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படத்தை பிரசுரித்தமைக்கு உதயன் பத்திரிகைக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. இது ஊடக அடக்குமுறையின் ஒரு வடிவமே.
ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று சொல்லப்படுகின்ற ஊடகத்துறை, ஒரு நாட்டின் நீதி, நிர்வாகம், பாதுகாப்பு துறைகளுக்கு வழிகாட்டியாகவும், அந்தத் துறைகள் விடுகின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டி உண்மைகளை வெளிக்கொண்டுவந்து வழிநடத்துகின்ற ஒன்றாகவுமே இருக்கின்றது.
அவ்வாறான செயற்பாடுகளில் ஊடக நிறுவனங்களும், ஊடகவியலாளர்களும் ஈடுபடுகின்றபோது அவர்கள் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வேறு விதமான அச்சுறுத்தல்கள் பிரயோகிக்கப்படுகின்றன. இதை நாட்டினுடைய ஜனநாயகத்தை கேள்விக்குட்படுத்தும் ஒன்றாகவே பார்க்கமுடியும்.
விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், அடக்குமுறைகளுக்காகவும் போராடிய உன்னதமான விடுதலைப் போராளி. எத்தனை தலைமுறைகள் கடந்தாலும் தமிழ் மக்களின் மனங்களில் நீங்காத இடம்பிடித்த ஒருவராக அவர் என்றும் இருப்பார்.
அவர் தொடர்பான செய்திகளை பிரசுரித்தமைக்காக தமிழ் தேசிய நாளிதழான உதயன் மீது தொடரப்பட்டிருக்கும் வழக்கு கண்டனத்துக்குரியதுடன் ஊடக அடக்குமுறையின் மறு வடிவமாகவே பார்க்க முடியும் -என்றார். (ஒ.110)

# தமிழ் பேசும் மக்களின் குரலை நசுக்க முயற்சி

## *நானாட்டன் பிரதேச சபை தவிசாளர் காட்டம்*

மன்னார், டிசெ. 25
உதயன் பத்திரிகைக்கு எதிராக வழக்குப் பதிவு செய்துள்ளமையை ஏற்க முடியாது.
அரசின் இந்தச் செயற்பாடு தமிழ் மக்களை மீண்டும் பயங்கரமான நிலைக்கு கொண்டு சென்று அவர்களின் குரலை நசுக்குவதற்கான முயற்சி யாகவே இருக்கின்றது. இவ்வாறு நானாட்டன் பிரதேச சபையின் தவிசாளர் தி.பரஞ்சோதி தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
தமிழ் மக்களுக்கான ஊடகமாக நீண்ட காலமாக உதயன் செயற்பட்டு வருகின்றது. உள்ளதை உள்ளபடி கூறும் உதயன் பத்திரிகை மீது பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளமை கண்டனத்துக்குரியது.
ஊடகத்துறை சுதந்திரமாக சுயாதீனமாக செயற்பட அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறான கெடுபிடிகள் மக்கள் மத்தியில் அச்சத்தையே ஏற்படுத்துகின்றன என்றுள்ளது. (ஒ.213)





# தென்மராட்சியில் ஒளிவிழா நிகழ்வு

சாவகச்சேரி, டிசெ..25
தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் பாலன் பிறப்பைச் சித்தரிக்கும் வகையில் ஒளி விழா நேற்று முன்தினம் புதன்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.
நலன்புரி சங்கத் தலைவர் திருமதி கு.சுமதி தலைமையில் நடைபெற்ற விழாவில் சாவகச்சேரி கத்தோலிக்க திருச்சபை மற்றும் அசெம்பிளி ஒப் கோட் சபை ஆகியவற்றின் போதகர்களும் கன்னியாஸ்திரிகளும் கலந்துகொண்டு ஆசியுரைகளையும் இறை பாடல்களையும் வழங்கினர். (ந-9)

# மரணச் சடங்கில் பங்கேற்ற 56 பேருக்கு பி.சி.ஆர்.

கிளிநொச்சி டிசெ.25
மருதனார்மடத்தில் .தொற்று உறுதிப்படுத்தபட்ட நபருடன் தொடர்புகளைப் பேணிய பளையைச் சேர்ந்த 56 பேருக்கு நேற்றைய தினம் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.
மருதனார்மடம் தொற்றாளர் ஒருவர் தொற்று உறுதிசெய்யப்படுவதற்கு முதல் நாள் பளையில் மரணச் சடங்கொன்றில் கலந்து கொண்டிருந்தார்.
இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சுகாதார அதிகாரிகள் அவருடன் தொடர்புகளைப் பேணிய 56 பேரை தனிமைப்படுத்தினர்.
அவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனை நேற்று இடம்பெற்றது. இதில் 6 சுகாதாரத்துறை ஊழியர்களும் உள்ளடங்குகின்றனர். பி.சி.ஆர் முடிவுகள் கிடைக்கப்பெற்றதும் மேலதிக நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்படும் என சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ-6)



# மாணவர்களுக்கு கௌரவிப்பு!

கொடிகாமம், டிசெ.25
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கிளிநொச்சி சோரன்பற்று சி.சி.த.க பாடசாலை மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் ந.ராமதாஸ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதன்போது பி.பம்சிகா (187 புள்ளிகள்) த.கிருத்திகா ( 159 புள்ளிகள்) ஆகிய மாணவர்கள் பதக்கம் அணிவித்து நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை ஆசி நடராசா பௌண்டேசன் (குரும்ப சிட்டி) அமைப்பினர் வழங்கினர். (ற-159)

# காணியற்றோரை கருத்திற்கொண்டு காணிகளை அடையாளப்படுத்தவும்

## பச்சிலைப்பள்ளி தவிசாளர் வேண்டுகோள்

**கிளிநொச்சி, டிசெ.25**

**ஒரு இலட்சம் காணித் துண்டுகள் வழங்கும் செயற்றிட்டத்துக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் காணிகளை அடையாளப்படுத்தும் போது, குடியிருப்பு தேவைகளுக்கு காணி அற்ற மக்களின் தேவைகளையும், மாவட்டத்தின் எதிர்கால காணித் தேவைகளையும் கருத்தில் எடுக்க வேண்டும் என பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் மாவட்டச் செயலரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



இந்த வேலைத்திட்டம் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே இவர் இவ்வாறு தெரிவித்தார். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள காணியற்ற மக்களுக்கு பளைப்பகுதியில் உள்ள காணி சீர்திருத்த ஆணைகுழுவுக்கு சொந்தமான காணிகளைப் பகிர்ந்தளித்து அவர்களின் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவர் இதன்போது வேண்டுகோள் விடுத்தார்.

கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் மற்றும் திணைக்களத் தலைவர்கள், பிரதேச சபையின் தவிசாளர்,பிரதேச செயலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (வ-6)



# சுன்னாகம் பஸ் நிலையம் முன்பு ஆபத்தான நிலையில் வடிகால்

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.25

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு முன்பாக காணப்படும் வடிகாலுக்கு பல வருடங்களாக மூடி போடப்படாததால் இரவு வேளைகளில் வாகனங்களில் செல்வோர் வீழ்ந்து காயமடைகின்றனர் என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்கள் அதிகம் நடமாடும் சந்தைக்கு முன்பாக உள்ள இந்த பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்த வடிகால் காணப்படுகிறது.

இந்த வடிகாலுக்கு மூடி அமைக்குமாறு பல தடவைகள் பிரதேச சபையிடம் முறையிட்டும் பயன் கிடைக்க வில்லை. இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ந-9)

# அதிக கட்டணம் அறவிடும் வவு.தனியார் பேருந்துகள்

## மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், டிசெ.25

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா செல்லும் தனியார் பேருந்துகள் அரசால் அறிவிக்கப்பட்ட புதிய ஒருவழிக் கட்டணத்தை விட 20 ரூபா வரை அதிகரித்து அறவிடுகின்றன என பயணிகள் தெரிவிக்கின்றனர்.

தூர இடங்களுக்கான அரச பேருந்துகள் உட்பட அனைத்து தனியார் பேருந்துகளும் புதிய கட்டணத்தை அறவிடும் நிலையில் வவுனியாவுக்குச் செல்லும் பேருந்துகள் மட்டும் புதிய கட்டணத்தை விட பத்து ரூபா தொடக்கம் 20 ரூபா வரை பயணத் தூரத்தின் அடிப்படையில் நிர்ணயித்ததை விட அதிகமாக அறவிடுகின்றன.

கொரோனாத் தொற்று காரணமாக பேருந்துகள் குறைந்த அளவு பயணிகளை ஏற்றிச் செல்லும் நிலை காணப்படுவதால் ஒருவழிக் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. இதனைத் தெரிவித்து கூடுதல் கட்டணம் அறவிடப்படுகின்றது என பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (ந-9)



புதிய அரசாங்கத்தின் சுபீட்சமான நோக்கு செயல்திட்டத்தின் ஓர் பகுதியான வீட்டுத் தோட்ட நிகழ்ச்சித் திட்டத்தில், கொடிகாமம் மத்தி ஜே/327 கிராம அலுவலர் பிரிவினருக்கு பழமரக் கன்றுகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. (ற-159)

# பாடசாலைகளுக்கு மடிக்கணினிகள்

கொடிகாமம், டிசெ.25

யாழ் மாவட்டத்தில் உள்ள 16 பாடசாலைகளின் திறன் வகுப்பறைத் தொகுதிகளுக்கான மடிக் கணினிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் யாழ் மாவட்டச் செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டு பாடசாலைகளுக்கான மடிக் கணினிகளை பாடசாலை அதிபர்களிடம் வழங்கினார். (ந-159)

# மிருசுவிலில் தொடரும் தாக்குதல் சம்பவங்கள்

சாவகச்சேரி, டிசெ.25

மிருசுவில் கெற்பேலி பகுதியில் அண்மைக் காலமாக பலர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு வருகின்றனர். கடந்த வாரம் கிளாலிப் பகுதியில் குடும்பத்தர் மீது வாள் வெட்டு நடத்தப்பட்ட நிலையில், தொடர்ச்சியாக கெற்பேலிப் பகுதியில் இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகும் ஆண்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் வழங்குவோர் என்ற சந்தேகத்தின் பேரில் தாக்குதல் இடம்பெற்று வருகிறது எனத் தெரிவிக்கப்படும் நிலையில், இது தொடர்பில் பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-9)

# தேவாலயங்களுக்கு பலத்த பாதுகாப்பு

முல்லைத்தீவு, டிசெ.25

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அன்னைத்து கிறிஸ்தவ வழிபாட்டு தலங்களிலும் துப்பாக்கி ஏந்திய படையினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ளார்கள். கிறிஸ்மஸை முன்னிட்டு நேற்று நள்ளிரவு 11.30 தொடக்கம் இரவு ஆராதனைகளும் இன்று காலை 6 மணிக்கு காலை ஆராதனைகளும் நடைபெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை முல்லைத்தீவில் மக்கள் நடமாட்டம் அதிகமாக காணப்படும் நகர் பகுதிகளிலும் படையினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள்.

கொரோனாத் தொற்று அச்சத்தால், கூட்டங்களைத் தவிர்த்து, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, எளிமையான முறையில் நத்தார் பண்டிகையைக் கொண்டாடுமாறு மக்களுக்கு கிறிஸ்தவ மதத்தலைவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-19)



# கிறிஸ்மஸ்ஸை முன்னிட்டு உலர் உணவு பொதிகள்!!

வவுனியா, டிசெ.25

வவுனியா மாவட்டத்தில் மெனிக்பாம், கிறிஸ்தவக் குளம், அரசகுளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு நேற்று உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு, ஜீவ ஊற்று அன்பின் கரம் ஊடாக இந்தப் பொதிகள் வழங்கப்பட்டன. (ற-222)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கொரோனாவும் தமிழ் கைதிகளும்

சிறைச்சாலை என்பது குற்றவாளிகள் என இனங்காணப்பட்டோர், சந்தேகத்துக்கிடமானவர்கள் மற்றும் சட்டத்தின் அடிப்படையில் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனைக்குள்ளானோர் போன்றவர்களை சமூகத்திலிருந்து 'தனிமைப்படுத்தி' தடுத்து அல்லது அடைத்து , கடுமையான பாதுகாப்போடு பராமரிக்கப்படும் இடம் என்பது தெரிந்த விடயமே.

இந்தத் தனிமைப்படுத்தல் பாதுகாப்பு அல்லது தடுத்து வைப்பு என்பது ஒரு வகைத் தண்டனையே. சிலவேளைகளில் குற்றவாளிகள் மட்டுமல்லாது அப்பாவிகளான சுற்றவாளிகளும் சிறைப்பறவைகளாவதுண்டு. அத்தகைய அப்பாவிகள் நீதி விசாரணைகள் மறுக்கப்பட்டு, அதிகார ஆட்சிப்பீடத்தவரின் சுயநல அரசியல் அபிலாஷைகளுக்காக அநியாயமாக சிறைக்குள் அடைக்கப்பட்டு, உடலியல் ,உளவியல் ரீதியான சித்திர வதைகளுக்கு வெகுநுட்பமாக உள்ளாக்கப்படுவதுமுண்டு.

எதுவானாலும் கைதிகள் எனப்படுவோர் மனித உணர்வுகளையும், மனித உரிமைகளையும் முற்றாக இழந்தவர்களல்லர். தண்டனை முடிந்தபோதோ, அவர்கள் மீதான சந்தேகம் நீதி விசாரணையில் தீர்ந்தபோதோ சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு மீண்டும் சுயாதீனமாக மனித வாழ்வைத் தொடர அனுமதிக்கப்பட வேண்டியவர்கள். அதற்கான உரித்தையும் உடையவர்கள். அதுவரையில் சிறையில் அவர்களைப் பராமரித்து பாதுகாக்கும் பொறுப்பு என்பது அரசுக்கு அதாவது சிறைத்துறைக்கு உண்டு. அதுவும் ஒரு உலகப் பொது விதியாகக் கூறப்படுகிறது. ஆனால் அது அவ்வாறு நடைமுறையில் பின்பற்றப்படுகிறதா? என்பது கேள்விக்குறியே.

இலங்கை போன்ற நாடுகளில் சிறைவாசிகள் எவ்வாறாகப் பராமரிக்கப்படுகிறார்கள், பாதுகாக்கப்படுகிறார்கள் அவர்களுக்கான மனித உரிமைகள் எவ்வாறெல்லாம் மதிக்கப்படுகின்றது என்பதற்கு வெலிக்கடைச் சிறையில் நிகழ்ந்த கறுப்பு ஜூலைப் படுகொலைகள் உட்பட பல சம்பவங்கள் இரத்த வாடை வீசும் வரலாற்றுச் சான்றாதாரங்களாகவே உள்ளன.

சிறைக்குள் கோலோச்சும் இனவாத, மதவாத அராஜகங்களின் பின்னணியில் காலம்காலமாக இருந்து வரும் பேரினவாத அரசியல் சிந்தனை எவராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாத அசிங்கம். இது இலங்கையின் பேரினவாத ஆட்சியாளருக்கு சூடு சுரணையற்ற விடயமாகவே தொடர்கிறது.

இந்நிலையில், நியூ மகசின் சிறைச்சாலை உட்பட பல்வேறு சிறைகளில், பல்வேறு காரணங்களுக்காக, குற்றச்சாட்டுக்களுக்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கும், நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படாத, அல்லது நீதி விசாரணை மறுக்கப்பட்ட 13 அரசியல் கைதிகள் உட்பட 64 தமிழ்க் கைதிகள் கொரோனா நோய்த் தொற்றுக்குள்ளாகி உள்ளனர் என வெளிவந்த செய்தி அதிர்ச்சியூட்டுகிறது.

கொரோனாப் பரவல் கட்டுப்படுத்த முடியாமல் அதிகரிக்கின்றது என்பது உண்மைதான். ஆனால் கொரோனாப் பரவலை தடுக்க பயன்படுத்தப்படும் பிரதான உத்தி 'தனிமைப்படுத்தல்' தான் என்று கூறப்படுகையில், சிறைக்குள் தனிமைப்படுத்தலில் பல ஆண்டு காலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளுக்கு பெருமளவில் கொரோனா என்ற பேரிடர் நோய் தொற்றக் காரணம் என்ன என்று அந்தக் கைதிகளின் உறவுகள் மத்தியில் எழுவது தவிர்க்க முடியாததே!

நீதி மறுக்கப்பட்டு விசாரணை ஏதுமின்றி, அநியாயமாக உடலியல் வதைகளுக்குள்ளாகி வரும் தமிழ்க் கைதிகளுக்கு மருத்துவ வசதிகள் உரிய முறையில் வழங்கப்படுமா என்ற சந்தேகம் எழுவதும் யதார்த்தமே!

தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் மிகப்பெரும் பிரச்சினையாக சர்வதேச மட்டத்தில் பேசப்படும் நிலையில், வேண்டுமென்றே திட்டமிட்ட முறையில் தமிழ் அரசியல் கைதிகளுக்கிடையே கொரோனா பரப்பப்பட்டதா என்ற கேள்வியும் பரவலாக எழுத் தொடங்கியுள்ளது.

அதுமட்டுமல்லாது தமிழ் அரசியல் கைதிகளுக்கு கொரோனா பரவிய விவகாரம் ஐ.நாவிடம் முறையிடும் அளவுக்கு போயுள்ளது. இது தொடர்பாக அரசு விரிவான விளக்கம் தரவேண்டியது அதன் தார்மீகப் பொறுப்பு.
கைதிகள் விவகாரத்தில் தீர்க்கமானதும். தீவிரமானதுமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது தமிழ்க்கட்சிகளின் அவசரமான, ஒருங்கிணைந்த செயற்பாட்டையே இப்போது காலம் கோரி நிற்கின்றது.

# தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு கடன்பட்டே நிவாரணம் வழங்குகின்றோம்

## வவுனியா பிரதேச செயலர் ஆதங்கம்

வவுனியா, டிசெ. 25

**உரிய நிதி ஒதுக்கப்படாமையால் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணங்களை வழங்குவதில் சிரமமான நிலைமை காணப்படுகின்றது. கூட்டுறவுச் சங்கத்திடம் கடனுக்கே பொருள்களை வாங்கி மக்களுக்கு வழங்குகின்றோம். இவ்வாறு வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தெரிவித்தார்.**

வவுனியாவில் கொவிட்-19 தனிமைப்படுத்தல் காரணமாக தவித்து வரும் குடும்பங்களுக்கு நிவாரணங்கள் எவையும் வழங்கப்படவில்லை என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக அவரிடம் கேட்ட போதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு உரிய ஒதுக்கீடுகள் எமக்கு கிடைக்கப்பெறவில்லை.எனினும் கூட்டுறவுச் சங்கத்திடம் கடன்பட்டே அந்த மக்களுக்கான நிவாரணங்களை வழங்கி வருகின்றோம். குறைந்த எண்ணிக்கையுடையவர்கள் என்றால் கடன் வாங்கி வழங்கலாம். அதிகமான தொகையினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதால் நிதி ஒதுக்கீடு இல்லாமல் அதனை சீரான முறையில் வழங்க முடியவில்லை.
தற்போது எமது பிரிவில் திருநாவற்குளத்தில் 30 குடும்பங்கள், சாளம்பைக்குளத்தில் 90 குடும்பங்கள் மற்றும் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 100 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மேல் தனிமைப்படுத்தப்பட்டுள்ள்தால் அவர்களுக்கான நிவாரணத்தை வழங்குவதற்கு அதிகமான நிதி தேவையாக இருக்கிறது. இன்றைய தினமும் கூட்டுறவுச் சங்கத்திடம் 100 குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகளை கடன் அடிப்படையில் வழங்குமாறு கேட்டுள்ளோம். சிரமத்துக்கு மத்தியிலேயே நிவாரணப் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம் - என்றார்.

(ஒ.110)



## கொரோனாவுக்குள்ளும் நத்தார் வியாபாரம்

வவுனியா, டிசெ. 25

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் நத்தார் வியாபாரம் ஓரளவு சிறப்பாக வவுனியாவில் இடம்பெற்றுள்ளது. மக்கள் நேற்றைய தினம் பெருமளவில் புதிய ஆடைகளையும், நத்தார் அலங்காரப் பொருள்களையும் கொள்வனவு செய்தனர்.
நத்தார் பண்டிகைக்கு ஒரு வாரத்துக்கு முன்னரே வவுனியா நகர் மக்கள் கூட்டத்தால் வழமையாக நிரம்பி வழியும். ஆனால் கொரோனா காரணமாக மிகக் குறைந்தளவான மக்களே நகரப் பகுதிக்கு வந்தமை அவதானிக்க முடிந்தது. (ஒ.18)

## டெங்குக் காய்ச்சலை கண்டறிய உயிரியல் செயற்கைக் கருவி

*களனிப் பல்கலையில் கண்டுபிடிப்பு*

டெங்குக் காய்ச்சலின் தீவிரத்தன்மையைக் கண்டறிய உயிரியல் செயற்கைக் கருவியொன்றை களனிப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் குழு உருவாக்கியுள்ளது.
டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்படுபவர்களில் மிகச்சிறிய சதவீதமானவர்கள் மட்டுமே தீவிர கட்டத்தை எட்டுகிறார்கள். அப்படியாக, தீவிர இரத்தக்கசிவு காய்ச்சல் நிலைக்குச் செல்லும் ஒருவர், அந்த அறிகுறியைக் காண்பிப்பதற்கு முன்னதாகவே கண்டறிய இந்தக் கருவி உதவுமெனத் தெரிவிக்கப்படுகிறது. ஆரம்ப கட்டத்தில், ஒரு நபருக்கு இலேசான டெங்குக் காய்ச்சல் வருமா அல்லது டெங்கு இரத்தக்கசிவு காய்ச்சல் வருமா என்பதை சுகாதார அதிகாரிகளால் தீர்மானிக்க முடியாது. ஆகவே டெங்கு நோயாளிகள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறார்கள். அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய உபகரணத்தின் மூலம் தீவிரமான டெங்குவை ஆரம்ப கட்டத்திலேயே அடையாளம் காண முடியும் என்று ஆராய்ச்சிக் குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது. (ப)

# போதைப் பொருள்களுக்காக தினமும் அதிக பணம் செலவு

## சமாதி ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 25

இலங்கையர்கள் தினமும் மதுபானம் மற்றும் புகையிலைப் பொருள்களுக்காக பில்லியன் ரூபாக்கும் அதிக தொகையை செலவிடுகின்றார்கள் என்ற அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார் புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபையின் தலைவர், கலாநிதி சமாதி ராஜபக்ச.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
இலங்கையில் தினமும் சுமார் 60 பேர் புகைப்பிடிப்பதால் இறக்கின்றனர். சுமார் 50 பேர் மதுபானம் காரணமாக இறக்கின்றனர். இந்த இரண்டு காரணங்களால் ஒவ்வொரு மணி நேரத்துக்கும் 4 பேர் இறக்கின்றனர். சிகரெட் மற்றும் மதுபானங்கள் மூலம் அரசு வரி பெற்றாலும், போதைப்பொருள் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்க வரி வருவாயை விட மூன்று மடங்கு அதிகமாகச் செலவிட வேண்டியுள்ளது - என்றார்.

(ப)

# நாட்டை முன்னேற்றும் திட்டங்களை விரைந்து செயற்படுத்துங்கள்

## பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 25

அனைத்துத் துறைகளிலும் நாட்டைத் தன்னிறைவடையச் செய்யும் வேலைத்திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இரத்மலானையில் அமைந்துள்ள அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தில் புதிய ஹோர்மோன் மாத்திரை உற்பத்தி ஆலையைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாம் 70 வீதமான மருந்துகளை இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றோம். அவ்வாறு இறக்குமதி செய்கின்றோமாயின், அந்த மருந்துகளை நம் நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கான பொறுப்பு எமக்குள்ளது. அதனைச் செய்வதற்கான ஞானம் மற்றும் அறிவு மிகுந்தவர்கள் எம்மிடம் உள்ளனர். இந்த நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்தும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட வேண்டும். வெளிநாட்டு இறக்குமதியைக் குறைக்க வேண்டும் என்பதிலும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் அரசு உறுதியாக உள்ளது. அதனால் அதற்கான வேலைத்திட்டங்களை நாம் அனைத்துத் துறைகளிலும் செயற்படுத்த வேண்டும் - என்றார். (ப)



"கற்பகா" மரநடுகைத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்தில் பழமரக் கன்றுகள் நேற்று வியாழக்கிழமை நடுகை செய்யப்பட்டன. (ஐ-222)

## "பல்" மீட்டவருக்கு பணப் பரிசில்

கொழும்பு, டிசெ.25

விபத்தில் சிறுமியின் உடைந்த பல், சம்பவ இடத்தில் இருந்து மீட்கப்பட்டு உடனடியாக பொருத்தப்பட்டுள்ளது. பல்லை மீட்டுக் கொடுத்தவர்களுக்கு பணப்பரிசு வழங்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கண்டி, கொழும்பு பிரதான வீதியின் கடுகன்னாவ ஹேனாவல சந்திக்கு அருகில் இடம்பெற்றது.

குறித்த பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிறுமியின் பல் உடைந்து வீழ்ந்துள்ளது. அந்த பல்லை அவதானித்த கடுகன்னாவ பொலிஸ் அதிகாரிகள் இருவர் அதனை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். இதனையடுத்து சிறுமியின் உடைந்த பல் மருத்துவர்களால் பொருத்தப்பட்டது. பல் கொண்டு சென்ற பொலிஸ் அதிகாரிகள் இருவருக்கு பணப்பரிசு கிடைத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-இ)



## வறிய மாணவர்கள் 9 பேருக்கு உதவிகள்

கொடிகாமம், டிசெ.25

கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு சைக்கிள் மற்றும் பாதணிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை பாடசாலை மண்டபத்தில் அதிபர் தா.கணேச பாலேந்திரன் தலைமையில் நடைபெற்றது

மந்துவில் வக்கைச் சேர்ந்த க.கலைச்செல்வனின் நிதி அனுசரணையில் இரு மாணவர்களுக்கு சைக்கிள்களும், 7 மாணவர்களுக்கு பாதணிகளும் வழங்கப்பட்டன. நிகழ்வில் தென்மராட்சி கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜெகதாசன், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ-159)

## வறிய குடும்பத்துக்கு குழாய்க் கிணறு

கொடிகாமம் டிசெ. 25

தென்மராட்சி ஜே 308 வேதாந்த மடம் பிரதேசத்தில் வீட்டில் கிணறு இல்லாமல் மிகவும் கஷ்ரப்பட்ட நிலையில் இருந்த குடும்பம் ஒன்றுக்கு குழாய்க் கிணறு கையளிக்கப்பட்டது.

சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனின் ஏற்பாட்டில் அந்தக் குழாய்க் கிணறு அமைத்துக் கையளிக்கப்பட்டது.

கொழும்புத்துறையில் வசித்த தற்போது புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் ஒருவரின் நிதி உதவியில் இந்த குழாய்க் கிணறு அமைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-159)




## ரொஹான் பெலவத்த சஜித்துடன் இணைவு

கொழும்பு, டிசெ.25

பிரபல சட்டத்தரணியும், கடந்த ஜனாதிபதி தேர்தலில் சோசலிச ஜனநாயகக் கட்சியின் வேட்பாளருமான ரொஹான் பெலவத்த ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் அதிகாரபூர்வமாக நேற்று இணைந்து கொண்டுள்ளதுடன் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசவையும் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

மேலும் கட்சியின் வெளிவிவகாரம் மற்றும் வெளிநாட்டு வர்த்தக பிரிவு பெலவத்தவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-இ)



ஏழாலை மற்றும் மல்லாகம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய 90 மாணவர்களுக்கு தலா 1,500 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வடக்கு மாகாண இரட்சணிய சேனை நிறுவனத்தால் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-159)

## தொழில் முனைவோருக்கு காணி: கிளிநொச்சியில் கலந்துரையாடல்

கிளிநொச்சி, டிசெ. 25

காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பாகவும் இளம் தொழில் முனைவோரின் முயற்சிகளுக்குக் காணித்துண்டுகளை முதலீட்டு வாய்ப்புக்களுக்காக வழங்குவதில் உள்ள வரையறைகள் தொடர்பாகவும் தேசிய வேலைத்திட்டத்துக்கான முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்திலே காணிகளுக்கு விண்ணப்பித்துள்ள முயற்சியாளர்களுக்கு எவ்வாறு காணிகளைப் பகிர்ந்தளிப்பது என்பது தொடர்பாக ஆராயப்பட்டது.



இது தொடர்பில் மாவட்டச் செயலர் தெரிவித்ததாவது;

கிளிநொச்சி மாவட்டத்திலேயே 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் விண்ணப்பங்களைச் சரியான முறையில் பரிசீலனை செய்து பிரதேச செயலாளர்கள் ஊடாக நேர்முகத் தேர்வுகளை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்தோடு துறைசார்ந்த அதிகாரிகளின் பங்குபற்றுதல்களோடு நேர்முகப் பரீட்சைகளை நடத்துவதற்கு எதிர்பார்க்கிறோம். காணிகளை அடையாளப்படுத்தி அதன் பின்னர் வழங்கக்கூடியதாக இருக்கும். காணிகள் தொடர்பான தீர்மானங்களை எதிர்வரும் வருடத்தின் முதல் வாரத்தில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம் -என்றார். (ப-222)

# உச்சக்கட்ட அவதானத்துடன் நத்தாரைக் கொண்டாடுங்கள்


நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 25
பண்டிகைக்காலமான இக் காலத்தில் மக்கள் உச்சக்கட்டப் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: நத்தார் வருடந்தோறும் ஒருமுறையே வரும். இறையேசு பாலகன் பிறந்த இந்தக் காலத்தில் உலகம் பூராகவும் அவர் பிறப்பைக் கொண்டாடுவார்கள். இவ் வருடம் இக் கொண்டாட்டங்கள் கவனத்துடனும் அவதானத்துடனும் நடைபெற வேண்டும் என்பது இறைவன் சித்தம் போலும். நத்தார் பண்டிகையையும், வருடப் பிறப்பையும் அதன் பின்னர் வரவிருக்கும் தைப் பொங்கலையும் எம் மக்கள் கட்டுப்பாடுகளுக்கு அமையக் கொண்டாடுவார்களாக! இறைவழிபாடு மனதால் நடைபெற வேண்டும். இவ் வருடம் கூடிக் கும்மாளம் அடிப்பதை கட்டுப்படுத்துவோமாக! பொருள்கள் வாங்கும் போதும் காய்,கறி உணவு வகைகள் வாங்கும் போதும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வோமாக! இறையருளால் எம் மக்கள் யாவரும் நலமுடன் வாழப் பிரார்த்திக்கின்றேன் என்றுள்ளது. (ம)

# 10,000,00 மரநடுகை திட்டம் நானாட்டானில் ஆரம்பம்



மன்னார், டிசெ. 25
நானாட்டான் பிரதேசச் செயலர் பிரிவில் பத்து லட்சம் மரங்களை நடும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. 'பிரஜா ஹரித்த அபிமானி' திட்டத்தின் கீழ் நேற்றுக்காலை 9.30 மணியளவில் மரங்கள் நடப்பட்டு இத் திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் எண்ணக்கருவிற்கு அமைய தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் மற்றும் மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஒழுங்கமைப்பில் நீர் மூலங்களை பாதுகாப்பதற்கு என நாடளாவிய ரீதியில் பத்து இலட்சம் மரங்களை நடும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நானாட்டான் பிரதேசத்தில் இடம் பெற்ற நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மாவட்டச் செயலர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமேல், கௌரவ விருந்தினர்களாக மன்னார் மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் சிவபாலன் குணபாலன் மற்றும் நானாட்டான் பிரதேச செயலர் எஸ்.கிறிஸ்கந்தகுமார், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்கள அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர். (ம-56)

# இன்புற்று வாழும் காலமாக வரும் புத்தாண்டு அமையும்

பேராயர் எஸ்.ஜெபநேசன் நம்பிக்கை



கொழும்பு, டிசெ. 25
நத்தாரை சிறப்பாகக் கொண்டாடுவோம். அனைவரும் இன்புற்று வாழும் காலமாக புத்தாண்டு அமையும் என்று தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் தெரிவித்தார்.

நத்தாருக்காக அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் பாலஸ்தீனா தேசத்தில் மக்கள் 'பயம்' என்னும் பேயால் பீடிக்கப்பட்டிருந்தனர். உரோமருடைய ஆட்சியில் பலவிதமான கொடுமைகளை அனுபவித்து வந்தனர். அந்தச் சூழலிலே தான் இயேசுபிரான் பிறந்தார். அவருடைய பிறப்பை முன்னறிவித்த தேவதூதர்கள் 'பயப்படாதிருங்கள்'' என்று கூறியே செய்தியைக் கூறினர்.

பயத்தைப் போல் மனிதனைப் பலவீனப்படுத்தும் சக்தி வேறொன்றுமில்லை. அமெரிக்காவின் புகழ்பூத்த ஜனாதிபதியாக இருந்த பிராங்லின் ரூஸ்வெல்ட் 'நாம் பயம் என்ற ஒரே இடத்துக்குத்தான் பயப்பட வேண்டும்'' என்றார். என்னவிதமான இன்னல்கள் நம்மைச் சூழ்ந்திருந்தாலும் நத்தாரின் குதூகலத்தை குறைத்துவிடலாகாது. புதிய வருடத்துக்குள் நம்பிக்கையோடு பிரவேசிப்போம்! எல்லோரும் இன்புற்று வாழும் காலமாக புதுவருடம் அமையும் என்று நம்புவோம் என்றுள்ளது. (ம)

# சாதாரண தர மாணவர்களுக்கு சுய கற்றல் இறுவட்டுக்கள்!

யாழ்ப்பாணம், டிசெ. 25
வடமாகாண கல்வித் திணைக்களத்தால் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கல்விப் பொதுத்தராதர மாணவர்களின் நலனுக்காக சுயகற்றல் இறுவட்டுக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த வருடம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு பரீட்சையை மையப்படுத்திய மீட்டல் வினாக்களும் அதற்கான விடையளிக்கும் முறை தொடர்பான ஒலிப்பதிவைக் கொண்ட இலத்திரனியல் கற்றல் மென் பொருள்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. தீவகம், கிளிநொச்சி, முல்லைத்தீவு,மற்றும் துணுக்காய் வவுனியா வடக்கு வலயப் பாடசாலைகளுக்கு வழங்குவதற்காக அவ்வவ் வலயங்களின் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு மேற்படி உபகரணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வடமாகாணத்தின் ஏனைய வலயப் பாடசாலைகள் தமக்குத் தேவைப்படும் இறுவட்டு ஒன்றை பாடசாலை அதிபரின் கோரிக்கைக் கடிதத்தை உரிய சுகாதார நியமங்களைப் பின்பற்றி நல்லூர் ஆனந்தா வித்தியாலயத்தில் இயங்கும் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தில் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ள முடியும். இறுவட்டை பெற்றுக்கொள்ளும் பாடசாலை அதிபர்கள் உரிய நியமங்களைப் பின்பற்றி மாணவர்கள், சுயகற்றலில் ஈடுபட அவற்றைப் பிரதி செய்து வழங்க முடியும் என வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (ம)




# கொரோனா பிரிவுக்கு சலவை இயந்திரம்

தெல்லிப்பழை, டிசெ. 25
தெல்லிப்பழை மருத்துவமனையிலுள்ள கொரோனா நோயாளர் பிரிவின் கோரிக்கைக்கு அமைவாக புலம் பெயர்ந்து வாழும் ஏழாலையைச் சேர்ந்த சோதிராஜா உமாநிதியின் நிதிப் பங்களிப்புடன் சலவை இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி மணிவண்ணன், மருத்துவர்கள், மருத்துவமனை நிர்வாகத்தினர் மற்றும் சோதிராஜா உமாநிதியின் உறவினரான உதயசங்கர், பிரதேச சபை உறுப்பினர் லகிந்தன், யாழ். மாநகர சபை உறுப்பினர் சிவகந்தன் தனுஜன் மற்றும் மானிப்பாய் பிரதேச பொறுப்பாளர் வீரசிங்கம் (வீரா) ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ.26)

கொரோனா அச்சம்

# தவறான முடிவெடுத்து பெண்ணொருவர் சாவு!

கொழும்பு, டிசெ. 25
கொழும்பில் கொரோனாவின் தீவிரம் அதிகரித்துள்ள நிலையில், தன்னால் தனது பிள்ளை களுக்கும் கொரோனா வந்துவிடும் என்ற அச்சத்தில் வயோதிபப் பெண்ணொருவர் தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்தார்.

வத்தளை ஹனுபிட்டியைச் சேர்ந்த வயோதிபப் பெண்ணே உயிரிழந்தவர். அவருக்கு வயது -73. குறித்த நபர் வயோதிபர்கள் கொரோனாத் தொற்றுக்கு இலகுவில் உட்படுகின்றனர் என்ற அச்சத்துடன் அண்மைக்காலமாக இருந்தார் என்று அவரின் மகன் தெரிவித்துள்ளார். (ம-இ)

# 24 மணி நேரத்தில் 35 பேர் கைது

கொழும்பு,டிசெ.25
முகக் கவசம் அணியாத மற்றும் சுகாதார ஆலோசனைகளை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்களின் கீழ் நாடுமுழுவதும் கடந்த 24 மணி நேரத்தில் 35 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் வாகனத்தை செலுத்துதல் மற்றும் போக்குவரத்து விதிமுறைகளை மீறும் நபர்களை அடையாளம் காண நாடு முழுவதும் 9 ஆயிரம் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் மதுபோதையில் வாகனம் செலுத்தி குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டால் சாரதி அனுமதி உரிமம் இரத்து செய்யப்படுவதுடன் 25 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-இ)

# கொரோனாவால் பாதிக்கப்பட்ட தவிசாளர் கட்சியிலிருந்து நீக்கம்

கொழும்பு, டிசெ.25

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிச்செயற்பட்ட பிரதேச சபைத் தவிசாளர் ஒருவரைக் கட்சியிலிருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இடைநிறுத்தியுள்ளது.

இ.தொ.காவின் உயர்மட்ட பிரமுகர் ஒருவர் இந்தத் தகவலை நேற்று உதயனுக்கு உறுதிப்படுத்தினார்.

பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் அதன் முடிவுகள் வெளிவருவதற்கு முன்னர், தனிமைப்படுத்தல் விதிமுறையை மீறி அரச நிகழ்வுகளில் அக்கரப்பத்தனை பிரதேச சபைத் தவிசாளர் பங்கேற்றிருந்தார். அவருக்கு வைரஸ் தொற்று உறுதியானதையடுத்து அமைச்சர் இருவர், இராஜாங்க அமைச்சர் ஒருவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர், பிரதேச சபைத் தவிசாளர்கள் எனப் பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த நிலையிலேயே கட்சியிலிருந்து தவிசாளரை இடைநிறுத்துவதற்கு இ.தொ.கா. நடவடிக்கை எடுத்துள்ளது. அவர் குணமடைந்து வந்த பின்னர் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (ப-44)

# இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, டிசெ.25

இடியன் துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரமந்தனாறு பகுதியில் வைத்து சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-113)

## தாய், சேய் நிலையத்தில்

# திருட்டுப் போன திரிபோஷ பைக்கெற்றுகள்

வவுனியா, டிசெ.25

வவுனியா மரக்காரம்பளை தாய், சேய் பராமரிப்பு நிலையத்தில் இருந்து திரிபோஷ பைக்கெற்றுகள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

குறித்த நிலையத்தில் கர்ப்பிணித் தாய்மார் மற்றும் குழந்தைகளுக்கு மாதாந்தம் திரிபோஷ வழங்கப்படுவது வழமை. இந்நிலையில் இவர்களுக்கு இம்மாதம் வழங்கப்படவிருந்த 74 திரிபோஷ பைக்கெற்றுகளே திருட்டுப்போயுள்ளன.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஜ-402)

# மின் கட்டணம் செலுத்த சலுகைக்காலம் நீடிப்பு

சுற்றுலா ஹொட்டல் உரிமையாளர்கள் மின் கட்டணங்களை செலுத்துவதற்கான காலஅவகாசம் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டுள்ள சுற்றுலா ஹொட்டல்களின் மின் கட்டண நிலுவை இருக்கும் பட்சத்தில், மின் இணைப்பை துண்டிக்க வேண்டாமென மின் சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும இலங்கை மின்சார சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என மின்வலு அமைச்சு அறிவித்துள்ளது.

சுற்றுலாத்துறையானது, இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்பு செய்கிறது. இந்த துறை சார்ந்தவர்களின் எதிர்கால நலன்கருதியும், பொருளாதார சிரமங்களை பரிசீலிக்கும் ஜனாதிபதியின் வழிகாட்டலில் நிவாரணங்களை தீர்மானித்துள்ளோம் எனவும் மேலும் அவர் மேலும் தெரிவித்தார். (ரி5-இ)




கணவனை இழந்து மூன்று பிள்ளைகளுடன் வாழ்ந்துவரும் பொருளாதார நிலையில் பின்தங்கிய பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

கனடா வாழ் பனிப்புல மக்களின் உதவும் கரங்கள் அமைப்பின் ஊடாக இந்த உதவி வழங்கப்பட்டது. (ஜ-222)

# வாடகைக்கு பெற்ற காரை அடகுவைத்து மோசடி

கொழும்பு, டிசெ.25

வாடகை அடிப்படையில் கார் ஒன்றைப் பெற்று, அதனை அடகுவைத்து மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது;

கண்டியைச் சேர்ந்த நபர், சிலாபம் பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் 70 ஆயிரம் மாதாந்த வாடகை அடிப்படையில் கார் ஒன்று பெற்றுக்கொண்டுள்ளார்.

எனினும், காரை வாடகைக்கு பெற்றவர் தலைமறைவாகியுள்ளார் என்று அநுராதபுரம் பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

இதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேகநபரால் இவ்வாறு வாடகைக்கு பெறுக்கொள்ளப்பட்ட மேலும் நான்கு கார்கள் அடகுவைக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

சந்தேக நபரை அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-இ)

# தாழ்நிலப் பிரதேசங்களில் வாழும் மக்கள் அவதானத்துடன் இருக்கவும்

## நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரிக்கை

அநுராதபுரம், டிசெ. 25

சீரற்ற காலநிலை காரணமாக இராஜாங்கனை மற்றும் தெதுரு ஓயா நீர்த்தேக்கங்கள் வான் பாயும் எல்லையை அடைந்துள்ளன என நீர்பாசனத் திணைக்களம் தெரிவித்தது.

இராஜாங்கனை நீர்த்தேக்கத்திலிருந்து செக்கனுக்கு 3 ஆயிரத்து 700 கன அடி நீர் கலாஓயாவுக்கு வெளியேற்றப்படுகிறது. தெதுரு ஓயா நீர்த் தேக்கத்தின் 3 வான்கதவுகள் 2 அடிக்கு திறக்கப்பட்டுள்ளன. அங்கிருந்து செக்கனுக்கு 5 ஆயிரத்து 250 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் குறித்த நீர்த் தேக்கங்களை அண்மித்த தாழ்நிலப் பிரதேசங்களில் வாழும் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டுமென எச்சரிக்கை விடுக்க ப்பட்டுள்ளது. (ரி5-இ)

## 10 பேருக்கு கொரோனா;

# ஆடைத்தொழிற்சாலை தற்காலிகமாகப் பூட்டு

நுவரெலியா, டிசெ.25

வட்டவளையில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் ஊழியர்கள் 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, குறித்த ஆடைத்தொழிற்சாலை தற்காலிகமாக மூன்று நாள்களுக்கு மூடப்பட்டுள்ளது என்று பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

4 ஆண்கள் மற்றும் 6 பெண்களுமாக 10 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதியானது. கடந்த 14 ஆம் திகதி வட்டவளை ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றி வரும் வட்டவளை மவுண்ஜின் தோட்டத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவருக்கு தொற்று உறுதியானதையடுத்து அவரோடு தொடர்பைப் பேணிய 60 பேருக்கு கடந்த 17 ஆம் திகதி பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் அறிக்கை நேற்றுமுன்தினம் மாலை வெளியாகியபோது மேற்படி 10 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை அடுத்தே ஆடைத் தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டது - என்றனர். (ப)



# மழைக்கு மத்தியிலும் 225 பேருக்கு பி.சி.ஆர்.

நுவரெலியா, டிசெ.25

நுவரெலியா டயகம மேற்கு பிரதேசத்தில் கொட்டும் மழைக்கு மத்தியில் 225 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி பிரதேசத்தில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கொரோனாத் தொற்றாளர்கள் எட்டு பேர் இனங்காணப்பட்டதையடுத்து, அவர்களுடன் நெருங்கி பழகியவர்களுக்கே பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (ஜ)

# போலி நாணயத்தாள்களுடன் பெண் உள்ளிட்ட மூவர் கைது

கொழும்பு, டிசெ.25

போலி நாணயத்தாள்கள் மற்றும் அவற்றை அச்சிப் பயன்படுத்தும் இயந்திரம் ஆகியவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு அச்சிட்ட போலி ஆயிரம் ரூபா நாணயத்தாள்கள் பல்வேறு கொடுக்கல் வாங்கல்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன எனவும் சந்தேகநபர்கள் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்கள் முஹூ னுவட்டன மற்றும் கடுவெல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-இ)

# அன்பும் மனிதகுல மீட்பின் அர்ப்பணிப்புகளும் கிறிஸ்துவின் போதனையில் முக்கியமானவை!

*வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி கோத்தாபய தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ. 25

இயேசு பிரான் போதித்த சமய நெறிகள் சமூகத்தின் நிலைத்தன்மைக்கு பங்களிக்கும் பல போதனைகளை கொண்டுள்ளன. பாவத்தின் இருளகற்றி, புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு சகோதர வாஞ்சையுடன் உதவுவது மற்றும் அனைத்து மனித குலத்தின் மீட்புக்கான அர்ப்பணிப்பு என்பவை இவற்றில் முதன்மையானவை என்று நான்எண்ணுகிறேன் இவ்வாறு தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

நத்தாருக்காக அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான கிறிஸ்தவர்களின் உள்ளங்களில் இறைவன் மீதான பக்தியுணர்வைத் தூண்டும் இயேசுக் கிறிஸ்துவின் பிறப்புடன் தொடர்புடைய நத்தார் பண்டிகையானது உயிர்ப்பு விழாவுக்கு அடுத்ததான உன்னதமான சமயப் பண்டிகையாகும். இது இயேசுநாதர் போதித்த மற்றும் நடைமுறையில் வாழ்ந்து காட்டிய




அமைதி, அன்பு, இரக்கம், சகவாழ்வு, கருணை போன்ற பண்பட்ட மனித சமூகத்தின் அடித்தளத்தை வடிவமைக்கும் உன்னத பெறுமானங்களை உள்ளடக்குகிறது.

சமூக ரீதியாக, நத்தார் கிறிஸ்தவ குடும்பங்கள் ஒன்று கூடுவதற்கும், பரிசுகளை பரிமாறிக்கொள்வதற்கும், பகைமைகளை மறந்து பிணைப்பை புதுப்பிப்பதற்குமான ஒரு மகிழ்ச்சியான சந்தர்ப்பமாகும். இயேசு பிரான் போதித்த சமயநெறிகள் சமூகத்தின் நிலைத்தன்மைக்கு பங்களிக்கும் பல போதனைகளை கொண்டுள்ளன. பாவத்தின் இருளகற்றி, புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு சகோதர வாஞ்சையுடன் உதவுவது மற்றும் அனைத்து மனித குலத்தின் மீட்புக்கான அர்ப்பணிப்பு என்பவை இவற்றில் முதன்மையானவை என்று நான்எண்ணுகிறேன். கொவிட் 19 தொற்றுநோய் நிலைமைகளுக்கு மத்தியில் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார ரீதியாக செயலற்றிருக்கும் உலகை மீண்டும் எழுச்சிபெறச் செய்ய இந்த நன்நெறிகளை பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

ஒரு வருடத்துக்கும் முன்னர் உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற கொடூரதாக்குதலின் கடுமையான வலிகளைச் சுமந்தவாறே இந்த நாட்டின் கிறிஸ்தவ மக்கள் நத்தார் பண்டிகையை கொண்டாடுகிறார்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஆயினும் கூட, அந்த அச்சங்களையும் பாதுகாப்பற்றதன்மையையும் அகற்றுவதற்கும், அச்சம், சந்தேகம் இல்லாமல் அனைவரும் சமயக் கிரியைகளில் ஈடுபடுவதற்கான சூழலை உருவாக்குவதற்கும் எமக்கு முடிந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியும் அவ்வாறே வழங்கப்படும் என்றுள்ளது. (ம)



## நத்தார் வாழ்த்துச் செய்தியில் யாழ். ஆயர் ஜஸ்ரின் வாழ்த்து

கொழும்பு, டிசெ. 25

கொரோனாப் பெருந்தொற்று மற்றும் வெள்ள இடர் காரணமாக ஏராளமான மக்கள் அவதியுற்றுவரும் நிலையில் அவர்களுக்கு உதவுங்கள் என்று தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை. அவரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

உலக மக்கள் அனைவரும் கொரோனா பெருந்தொற்று பற்றிய பயத்திலும் அதன் உருமாற்றம் பற்றிய அச்சத்திலும் உறைந்துள்ளனர். இன்று உங்கள் வீடுகளில் அமைக்கப்பட்டுள்ள பாலன் குடிலும், கிறிஸ்மஸ் மரங்களும் நம்பிக்கையின் ஒளியை இந்த உலகத்துக்கு ஏற்றட்டும். உலகம் முழுவதிலும் இந்த நோயால் பாதிக்கப்பட்டோர் மன அமைதி பெறுவார்களாக. இறந்தவர்கள் நித்திய அமைதியைப் பெறுவார்களாக.

கொரோனாவுடன் வெள்ள இடரும் எம் மக்களை வதைக்கின்றன. இந்த நெருக்கடி நிலையில் இயலாமையில் உள்ளவர்களுக்கு ஏனையவர்கள் அன்புக்கரமும் உதவிக்கரமும் நீட்ட வேண்டும். அர்த்தமுள்ள வகையில் கிறிஸ்மஸ் பண்டிகையை அனைவரும் கொண்டாடுவோம் என்றுள்ளது. (ம)



# அர்த்தம் பொருட்டும் நத்தார் பண்டிகை



ஒவ்வொரு திருவருகைக்காலமும், தவக்காலமும் கிறிஸ்தவர்களாகிய எமக்கு இன்றியமையாவை. மனிதத்தை மீட்பதற்காக இயேசுக் கிறிஸ்து திருவருகைக்காலத்தில் பிறக்கின்றார். அதை நடைமுறைப்படுத்துவதற்காக தவக்காலத்தில் இறக்கின்றார். இதனால் இந்த இரண்டு காலங்களும் எம் ஆன்மீகப் பயணத்தில் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவையாக அமைகின்றன. ஆனால் இவை மனிதத்துக்கான புதுப்பித்தல் என்ற தெளிவோ அல்லது புரிதலோ எமக்கில்லை என்பதுதான் துயரம்.

கிறிஸ்மஸ் மரத்தை இனி அந்தப் பெயரால் அழைக்காமல் அதை 'விடுமுறை மரம்' என்று அழைக்கவேண்டும் என்று ஆஸ்திரேலியாவில் கடந்த வருடம் விவாதித்தார்கள். அதற்குக் காரணம் என்ன தெரியுமா? கிறிஸ்மஸ் நிகழ்வு தொடர்ந்து நாட்டில் விடுமுறைக் காலமாகவும், கொண்டாட்டக் காலமாகவும் இருந்துவருவதால் அதைக் கிறிஸ்துவோடு சம்பந்தப்படுத்திப் பேசுவதும், கிறிஸ்துவின் பிறப்பை நினைப்பூட்டுவதும் அவர்கள் காதுக்கு நாரசமாக இருக்கிறது.

சமுதாயம் கிறிஸ்துமஸ் தினத்தை வெறும் களியாட்ட நாளாக மட்டும் பயன்படுத்திவருகின்றது. சபையைத் தோரணங்கள் கட்டி அழகுபடுத்தி, மேடைகளில் இயேசுவின் பிறப்பை நடித்துக்காட்டி, குழந்தை இயேசு பற்றிய பாடல்களைப்பாடி, கிறிஸ்மஸ் தாத்தா கைநிறைய பரிசுப்பொருள்களைச் சுமந்து குழந்தைகளை குசிப்படுத்தும் நாளாக கிறிஸ்தவ சமுதாயம் ஆக்கி வைத்திருக்கிறது. கிறிஸ்துமஸ் தினம் திருச்சபை வரலாற்றில் இருந்து வந்திருப்பதை நாம் மறுக்க முடியாவிட்டாலும், அது எதற்காக, எதை நினைவுபடுத்து வதற்காக, எதைச் செய்வதற்காக இருந்து வந்திருக்கிறது என்பதையாவது நினைத்துப் பார்க்கலாமல்லவா?

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு என்பது அவருடைய மீட்பின் செயல்கள் பற்றிய இறையியல் போதனைகளில் இருந்து பிரிக்க முடியாததொன்று. அவர் பிறக்கவே கூடாது என்று கங்கணம் கட்டி ஏரோது ஒருபுறம் போராடியிருக்க, இன்னொருபுறம், அவர் மரித்து உயிர்த்தெழவேயில்லை என்று நிரூபிக்க யூத ஆலயத் தலைவர்களும், ரோமர்களும் வரலாற்றில் போராடியிருக்கிறார்கள். இத்தனைக்கும் மத்தியில் வேதவார்த்தைகளின்படி மனித குமாரன் ராஜாவாக இந்த உலகத்தில் பிறந்து, மரித்து, உயிர்த்தெழுந்திருக்கிறார்.

இயேசு வரலாற்றில் பிறக்காமல் அவருடைய மீட்பின் செயல்கள் நிகழ்ந்திருக்க வழியில்லை. அவருடைய பிறப்பு அதியற்புதமான பிறப்பு. அவரைப்போல இந்த உலகத்தில் பிறந்த ஒரு மதத்தலைவரைக் காணமுடியாது.

அவருக்கு முன்னும் பின்னும் அப்படிப் பிறந்தவர்களில்லை. 'மனிதர்களில் ஒருவனும் இவனைப்போல சிறப்பாகப் பிறக்க வில்லை' என்று சொன்ன யோவான் ஸ்நானனுங்கூட இயேசுவைப்போலப் பிறக்கவில்லை.

இதிலிருந்து கிறிஸ்துவின் பிறப்பின் மகத்துவத்தை உங்களால் உணர முடிகிறதா? வார்த்தைகளால் பூரணமாக வர்ணிக்க முடியாத இத்தனை அற்புதமான இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையை வெறும் மரத்தையும், அலங்காரத்தையும், கிறிஸ்மஸ் தாத்தாவையும் வைத்துக் கொச்சைப்படுத்தலாமா? இப்படிக் கொச்சைப்படுத்துவதால்தானே கிறிஸ்மஸ் தினமே வேண்டாம் என்கிறார்கள் சில நல்ல கிறிஸ்தவர்கள்.

அவர்கள் கிறிஸ்துவின் பிறப்பை நிராகரிக்கவில்லை. கிறிஸ்மஸைக் கொண்டாட்டமாக்குவதைத்தான் நிராகரிக்கிறார்கள். கிறிஸ்துவின் பிறப்பில் நாம் ஆனந்தமடைவது தப்பா என்பீர்கள்? நிச்சயமாக அது தப்பில்லை. ஆனால் அது ஆவிக்குரிய ஆனந்தமாக இருக்கவேண்டும். கிறிஸ்மஸை உலகரீதியிலான கொண்டாட்டமாக்குவது ஆவியற்றவர்கள் செய்யும் அட்டகாசச் செயல். அவர்களுக்கு கிறிஸ்துவின் பிறப்பின் மகத்துவம் புரியவில்லை என்பதை அது காட்டுகிறது. கிறிஸ்மஸைப் பண்டிகையாக்கி பாவத்தைச் சேர்த்துக்கொள்ளாதீர்கள்.

கிறிஸ்துவின் பிறப்பு நமக்கு எதைச் செய்திருக்கிறது என்பதை சிந்தித்துப் பாருங்கள். அது மனிதன் பாவத்தில் இருந்து விடுதலை அடைவதற்கான வழியை உருவாக்கியிருக்கிறது.

பாவமாகிய கொடுமை மனிதனைப் பாதித்து அவனைச் சீரழித்து வைத்திருப்பதனாலேயே கிறிஸ்து மனித உருவெடுத்தார்; மரித்து உயிர்த்தெழுந்தார். பாவத்திலிருந்து விடுதலை அடைந்து ஆவிக்குரிய வாழ்க்கையை இந்த உலகத்தில் வாழ கிறிஸ்து வழியேற்படுத்தினார்.

அதற்கு அவருடைய பிறப்பு முக்கியம். அதிலல்லவா நாம் சந்தோஷப்பட வேண்டும். நாம் பெற்றிருக்கும் இரட்சிப்பு எத்தனை மகத்தானது என்பதை இயேசு கிறிஸ்துவின் பிறப்பும், வாழ்வும், சிலுவைப்பலியும், உயிர்த்தெழுதலும் நமக்குக் காட்டுகிறது. பாவத்தின் கோரத்தையும் அதிலிருந்து பெற்றுக்கொண்ட விடுதலையையும் நினைத்து நினைத்து, அதில் திளைத்து ஆண்டவரைப் போற்றுவதில் அல்லவா நாம் ஆனந்தமடைய வேண்டும். இதை உங்களுக்குள் ஏற்படுத்தாத கிறிஸ்மஸால் என்ன பயன்?



கிறிஸ்துவின் மகத்தான பிறப்பு, மனிதனை ஆட்டிப்படைக்கும் பாவத்திலிருந்து நித்திய விடுதலை இருக்கின்றது என்ற மாபெரும் செய்தியை மனிதனுக்கு அறைகூவலிட்டுச் சொல்லுகிறது. கிறிஸ்மஸ் இருக்கும்வரை இந்தச் செய்தியே அது உலகத்துக்கு அறிவிக்கும் நற்செய்தி. இயேசு கிறிஸ்துவில் வைக்கின்ற விசுவாசம் மட்டுமே அந்த விடுதலையைக் கொடுக்கும் என்பதை உலகுக்கு அறிவிக்க இயேசு பிறந்தார்.

அவருடைய பிறப்பு பாவநிவாரணத்துக்கான சிலுவைப் பலிக்கு அடித்தளமிட்டது. மறுபடியும் வரவிருக்கும் கிறிஸ்மஸ் தினம், மனிதனே! மனந்திரும்பி நீ இயேசு கிறிஸ்துவை விசுவசி, உன்னுடைய பாவவிடுதலைக்கான அனைத்தையும் இயேசு பூரணமாகச் செய்து முடித்திருக்கி றார். உன்னால் செய்ய முடியாததை அவர் செய்திருக்கிறார். தன்னுடைய இரத்தத்தைச் சிந்தி உனக்காக உன்னுடைய இடத்தில் தன்னையே பலியாகத் தந்திருக்கிறார். அவரிடம் இன்றே வந்து அவரை விசுவசித்து உன் பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுக்கொள், அவரை மட்டுமே ஆண்ட வராக நம்பி வாழு, பரலோகத்தில் அவரோடு வாழும் நித்திய வாழ்க்கையைப் பெற்றுக்கொள், காலத்தை வீணாக்காதே, இப்போதே அவரிடம் வா! என்று அறைகூவலிடுகிறது. மனிதம் மீட்கும் மன்னவனுடன் இணைந்து வாழ்வில் தொடர்ந்து பயணிப்போம். எமது பயணம் மனிதத்தை நோக்கிய அர்த்தமுள்ள பயணமாக இருக்கட்டும்.

## ஒளியாகி வாருமையா...

துன்பத் துயர் இருளில்
ததும்பித் தத்தளிக்கும்
எம்மை எல்லாம்
கரை சேர்க்கும்
ஒளி ஓடமாய் வந்த
யேசு பாலனே வாருமையா....

நாளை விடிந்தால்
நாளின் ஒரு வேளை உணவுக்கு
என்ன வழி? என்று தெரியாமல்
தாய் அவள் தலை
நித்திரையின்றிப் பாரமாச்சு....
ஏழை எளியவர்க்கு
உதவும் உன்னதமாய் வாருமையா....

பள்ளிச் சீருடையில் வளர்ந்து
பட்டைச் சீருடையை
எட்டிப் பிடிக்க வேண்டியவன்..
எடுபிடி வேலைகளில்
எல்லா இடங்களிலும்
அழுக்குத் துணியுடன்
அல்லும் பகலும் இருட்டில் கசங்கும்
பிஞ்சுகளைக் கண்ணுற்று –அவர்
பள்ளிக் காலமதை
ஒளிர்விக்க வாருமையா....

வீதியிலே வெள்ளைப் பிரம்புடன்
விதியே தெரியாமல்.... இதுவே
என் விதியென்று நடந்து

பிச்சை பாத்திரம் ஏந்தாது
பிழைப்புக்காய் ஏதோ
தான் கற்ற தொழில் செய்ய
நாளும் நடக்கும் மனிதன்...
வீதியிலே அவன் நடக்க
ஆங்காங்கே கைப்பிடித்துதவும்
கைவிளக்காய் வாருமையா....

ஓட்டுக் கேட்டு
ஊரூராய் மேடையேறி
உரக்கப்பேசி இழந்துவிட்ட
சொத்தையும், சக்தியையும்
வென்றபின் மீட்காது

மீண்டும் ஊரூராய் வந்து
இரத்தமாய் யாரும்
கண்ணீர் விடுகையிலே
இரணங்களைத் துடைத்தெறியும்
கரங்களாய் வாருமையா....

குழந்தைகட்கு உரைக்கும்
கீட்சொற்கள் எல்லாம்
சுவர்மேல் எறிபந்து போல
சுற்றியுள்ளாரை வந்து தாக்கும்...
பெற்ற பிள்ளைகட்காவது
நற்சொல் எடுத்தூட்டும்
தாயாக வாருமையா....

**த.சிவாஸ்கரன்**, அல்வை

SPECIAL Christmas OFFER

THIS YEAR END ONLY




Offer Price
Rs. 27,000/=
~~38,000/=~~

எமது வாடிக்கையாளர்களுக்கான அரிய வாய்ப்பு

நீங்கள் உங்கள் அயலவர்கள், நண்பர்களுக்கு எமது நிறுவனத்தைப்பற்றி தெரியப்படுத்தி அவர்களும் எமது *Water Filter* பொருத்தினார்கள் என்றால். அன்பான வாடிக்கையாளரான உங்களுக்கு 1 வருடத்திற்குரிய *Sediment Filter (6 pcs)* இலவசமாக தரப்படும்.

* One Year Warranty for all Electronic Parts.
* Life Time Free Service Warranty.
* Free water Testing.
* Freely Available Spare Parts.
* 24 Hours Breakdown Service.

YARL SMART
Water Solution (Pvt) Ltd

No.341 K.K.S Road, Jaffna. | 021 430 0044, 076 666 5267
yarlsmartwater@gmail.com | www.yarlsmartwater.com

# இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் நத்தார் பண்டிகை

## காதர் மஸ்தான் வாழ்த்து

முல்லைத்தீவு, டிசெ. 25



மலர்ந்திருக்கும் இந்த நத்தார் பண்டிகை யானது இனங்களுக்கிடையில் ஒற்றுமை, பரஸ்பரம் என்பவற்றை மேலோங்கச் செய் யட்டும் என்று தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட் டுள்ளார் வன்னி மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான்.

அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பி டப்பட்டுள்ளதாவது:

இன்று உலகெங்கும் நத்தார் திருநாளை கொண்டாடும் கிறிஸ் தவ பெருமக்கள் அனைவருக்கும் என் இனிய கிறிஸ்மஸ் நல்வாழ்த்துகள் உரித்தாகுக. அன்பு, இரக்கம், மனிதநேயம், கருணை என்பனவே இயேசு நாதர் மக்களுக்கு போதித்த நற்போதனைகளாக இருந்தன. இனங்களிடையே ஐக்கியமும் இனநல்லிணக்கமும் மலர இந்த நத்தார் திருநாள் ஒரு பால மாக அமைய கிறிஸ்தவ மக்கள் அர்ப்பணிப்புடன் செயல்ப டுகின்றனர். கடந்த வருடம் ஈஸ்டர் அனர்த்தத்தையடுத்து இந்த நாட்டில் எந்தக்கலவரங்களும் ஏற்பட்டுவிடாமல் மனிதாபி மானத்தோடு அந்த மக்கள் நடந்து கொண்டதை இந்த நாட்டு மக்கள் நன்கறிவர்.

இந்த நத்தார் பண்டிகை காலத்தில் வசதியற்று இயலாமையில் உள்ள எம் சகமக்கள் மீதான எமது கரிசனையை வெளிக் காட்டும் காலங்களாக அனுஷ்டிப்பதன் மூலம் மனித நேயத்தை நிலைப்படுத்தி உறவுகளுக்கிடையில் அன்பையும், பரஸ்பரத் தையும் வளர்த்துக்கொள்ள முடியும் என்றுள்ளது. (ம)

# இருளில் ஏற்றப்பட்ட ஒளியாக பாலகன் பிறப்பு அமையட்டும்

கொழும்பு, டிசெ. 25



ஆயுதப்போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 11 ஆண்டு கள் கடந்துவிட்ட போதிலும் போருக்கான காரணிகள் ஒன் றேனும் தீர்க்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் இரு ளின் ஒளியை பிறக்கும் பால கன் எம்மிடத்தில் கொண்டு வந்து சேர்க்கட்டும் என்று தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் அருள்பணி யாளர் கந்தையா ஜெகதாஸ்.

மெதடிஸ்த திருச்சபையின் அருள்பணியா ளர் கந்தையா ஜெகதாஸ், கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு வழங்கியிருக்கும் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப் பிட்டுள்ளதாவது:

அன்புசால் உடன்பிறப்புக்களே உங்கள் அனைவருக்கும் இறைமகன் ஆண்டவர் இயேக்கிறிஸ்துவின் பிறப்புத்திருநாள் நல் வாழ்த்துக்களும் இறையாசிகளும் உரித் தாகுக.

நாமனைவரும் மீண்டுமொருமுறை கிறிஸ் துவின் பிறப்புத் திருநாளை எதிர் கொள் கின்ற இவ்வேளையில் மனுக்குலம் கொரோனா எனும் கொள்ளை நோய் பேர வலத்துக்கு முகம் கொடுத்து அழிவினைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. இக் கொள்ளை நோய் உலகை உலுக்கிக் கொண்டிருக்கி றது. உலகின் ஒட்டுமொத்த மனுக்குலத்தின் எதிர்கால நம்பிகை சிதறடிக்கப்பட்டு அச்சம் சூழ்திருக்கிறது.

இந்த நாட்டிலும் கொரோனாவின் அச்சம் ஒருபுறம், இயற்கையின் சீற்றம் இன்னொ ருபுறம், வறுமை வேலையின்மை உழைப் பாளிகள் சுரண்டப்படுகின்றமை, பெண் கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்து கொண்டிருக் கின்றன. அதுமட்டுமல்ல போர் முடிந்து 11 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் போருக் கான காரணிகளில் ஒன்றேனும் தீர்க்கப்பட வில்லை. இவ்வாறான இருள்சூழ் நிலை யில் பிறக்கும் பாலகன் இயேசு 'இருளின் ஒளியாக' எமக்கு அமைய வேண்டும் என் றுள்ளது. (ம-60)





கிளைக் காரியாலயங்கள்:

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் இல.281C, மணிக் கூட்டு கோபுர வீதி. | 021 222 8004<br>070 301 5004 |
| வேலணை வங்களாவடிச் சந்தி | 021 221 5472<br>070 301 3012 |
| மல்லாகம் கே.கே.எஸ் வீதி. | 021 224 3393<br>070 301 3014 |
| சங்கானை ஓடக்கரை வீதி. | 021 225 1664<br>070 301 3016 |
| பண்டத்தரிப்பு கீரிமலை வீதி. | 021 225 2333<br>071 255 4135 |
| காரைநகர் பழைய கண்டி வீதி. | 021 225 2454<br>070 510 2484 |
| பருத்தித்துறை பருத்தித்துறை வீதி. நெல்லியடி. | 021 226 0999<br>071 775 0999 |
| சாவகச்சேரி தபால்நிலைய வீதி. | 021 227 0616<br>071 577 0616<br>0777 323 421 |



# வரம் அருளும் வைகுண்ட ஏகாதசி

இரா.நிஷாந்தன்

ஆதி அந்தம் இல்லாத எம் இந்து மதம்தனில் இந்து மக்களின் வாழ்வியலுடனும், பண்பாட்டுடனும் தொடர்புபட்டிருப்பன விரதங்கள். பல தெய்வங்களின் வழிபாட்டினை கொண்டிருக்கும் எம் இந்து மதத்தில் ஒவ்வொரு கடவுளருக்கென்று பல்வேறு விரதங்கள் அனுஸ்டிக்கப்படுகின்றன. அந்த விரதங்கள் அனைத்தும் மகிமையும், சிறப்பும் வாய்ந்தவை. அவை எம் மனதில் இறை உணர்வினை ஏற்படுத்துபவையாகும்.

**ஏகாதசி விரத மகிமை**

அந்த வகையில் உலகின் உயிர்களைக் காத்து அருள்கின்றவர் விஷ்ணு பகவான். மூம் மூர்த்திகளில் ஒருவராக திகழ்பவர் அவர். பூமியில் தர்மம் நலிவடைந்து அதர்மம் தலைதூக்கும் போதெல்லாம் அவதாரம் மேற்கொண்டு தர்மத்தை நிலைநாட்டும் அவதாரப்பிரியன். அத்தகைய மகாவிஷ்ணுவுக்கு மிகவும் உகந்த விரதங்களில் ஒன்று ஏகாதசி விரதமாகும்.

பார்வதி தேவி ஒரு சமயம் சிவபெருமானிடம் 'சுவாமி, விரதங்களில் சிறந்த விரதம் யாது?' எனக் கேட்டார். அதற்கு சிவபெருமான், 'தேவி, ஏகாதசி விரதமே விரதங்களில் மிகச்சிறந்த விரதமாகும். பாவங்களைப் போக்கும் விரதம் இது. மேலும், அஸ்வமேதயாகம் செய்த பலனை ஒருவனுக்கு அளிப்பது இந்த விரதமாகும்.

சொர்க்கத்தில் வசிக்கும் முப்பத்து முக்கோடி தேவர்களும் இவ்விரதத்தை அனுஸ்டித்து பாற்கடல் வாசனின் திருவருள் பெறுகின்ற நல்விரதமாக இது விளங்குகின்றது' என உரைத்தான் கைலாசவாசனாகிய சிவபெருமான். மேலும், காயத்திரியை விட சிறந்த மந்திரமில்லை, தாயில் சிறந்த கோயிலில்லை, கங்கையை விட சிறந்த தீர்த்தமில்லை, திருமாலை விட உயர்ந்த தேவரில்லை, அது போல ஏகாதசியைப் போல சிறந்த விரதமில்லை என்கின்றன புராணங்கள். இவ்வாறான ஏகாதசி விரதங்களில் மார்கழி மாதத்தில் வரும் வைகுண்ட ஏகாதசி விரதம் தனிச்சிறப்பும் மகத்துவமும் உடையதாக எம் புராணங்கள் எடுத்துரைக்கின்றன.

**ஏகாதசி விரதத்தின் தோற்றம்**

இத்தகைய ஏகாதசி விரதத்தின் தோற்றம் பற்றி நம் புராணங்களில் அழகிய புராணக்கதையொன்று சான்றாக அமைகின்றது. ஒருமுறை விஷ்ணு பகவான் தேவர்களுக்காக அசுரர்களுடன் நீண்டகாலமாக யுத்தம் செய்தமையால், மிகுந்த களைப்படைகின்றார். இதனால் களைப்பினைப் போக்கிக் கொள்ள யுத்தகளத்தில் இருந்து வெளியேறி, ஓர் குகையொன்றில் உறங்கி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். இதனை அவதானித்த அசுரர்களில் ஒருவனாகிய முரன் எனும் அசுரன் விஷ்ணுவைக் கொல்லும் நோக்கில் குகையினுள் பிரவேசித்தான். அவன் பகவானின் அருகே நெருங்கும்போது, விஷ்ணுவின் திருமேனியில் இருந்து அவரது மாயா சக்தியானது பெண் வடிவில் வெளிப்பட்டு அவ் அசுரனை கொன்றுவிட்டது.

உறக்கம் நீங்கி கண்விழித்த திருமால் நடந்த நிகழ்வை அறிந்து, அங்கு நின்ற மாயா சக்திக்கு ஏகாதசி எனப் பெயரிட்டு, 'இன்று முதல் யாரெல்லாம் உன் பெயரால் விரதமிருந்து என்னை வழிபட்டு வருகின்றனரோ, அவர்கள் வேண்டும் வரங்களை கொடுத்து அவர்களுக்கு திருவருள் பாலித்து என்றும் அவர்களைக் காத்தருள்வேன் என வரம் நல்கி அச்சக்தியை தன்னுள் அடக்கிக் கொண்டார். இவ்வாறே ஏகாதசி விரதம் தோற்றம் பெற்றது. அன்று முதல் திருமாலுக்கு மிகவும் பிரியமான விரதமாக ஏகாதசி அமையப் பெற்றது.

> இன்றையதினத்தில் விஷ்ணு பகவான் வைகுண்ட லோகத்திலிருந்து சொர்க்க லோகம் வருகை தந்து தன் பக்தர்களுக்கு திருவருள் பாலிக்கின்றார் என்கின்றன புராணங்கள். இதனை வெளிப்படுத்தும் வகையிலேயே இன்றைய தினத்தில் விஷ்ணு ஆலயங்களில், சுவர்க்க வாயில் திறத்தல் எனும் அதிஉயர் செயற்பாடு சிறப்புற நடைபெறும்.

**மார்கழி ஏகாதசியின் சிறப்பு**

அவ்வகையில் விஷ்ணுவுக்குரிய இவ் ஏகாதசி விரதம் மாதம் ஒன்றில் வளர்பிறை ஏகாதசி, தேய்பிறை ஏகாதசி என இரு விரத நாள்கள் வரும். ஆகவே வருடமொன்றில் 24 (காலக் கணப்பில் சில சமயம் 25) ஏகாதசி விரத நாள்கள் வருகின்றன. இவை அனைத்திலும் மார்கழி மாதத்தில் அதாவது இன்றைய வைகுண்ட ஏகாதசி விரதமே அதி உன்னத சக்தி பொருந்தியதாகும். இன்றைய வைகுண்ட ஏகாதசி விரதம் ஏனைய அனைத்து ஏகாதசி விரதங்களின் பலன்களை ஒருசேரதரவல்லதாகும். இத்தகைய ஏகாதசி விரதம் சுவர்க்க வாயில் ஏகாதசி, மோட்ச ஏகாதசி, முக்கோடி ஏகாதசி எனும் பல பெயர்களால் சிறப்பிக்கப்படுகின்றது.

**ஏகாதசி விரத அனுஸ்டானம்**

இன்றைய வைகுண்ட ஏகாதசி விரதம் அனுஸ்டிப்பவர்கள், இன்று நாள் முழுவதும் உணவு உண்ணாது உபவாசம் இருந்து இவ்விரத்தை அனுஸ்டிப்பது சாலச்சிறந்தது. அவ்வாறு இருக்க முடியாதவர்கள் கிழங்கு, பால் என்பவற்றை கைக்கொண்டு விரதத்தை அனுஸ்டிக்கலாம். அத்துடன் இன்றைய நாளில், தீயவை எதுவும் புரியாது, பகவான் விஷ்ணுவின் நினைப்பில் மனதை இருத்த வேண்டும். மேலும், திருமாலின் பெருமை கூறும் புராணங்களைப் படித்தல், நாலாயிர திவ்ய பிரபந்தப் பாடல்களைப் படித்தல், மற்றும் விஷ்ணு நாமங்களை உரைத்தல், நாம சங்கீர்த்தனம் செய்தல் என்பவற்றைச் செய்வது உத்தமம். மேலும், இன்றைதினம் திருமால் ஆலயங்களில் இவ் விரத வழிபாடு வெகு சிறப்பாக நடைபெறும், ஆகவே விரதம் அனுஸ்டிப்பவர் களும், ஏனைய அனைவரும் இன்றைதினம் திருமால் ஆலயம் சென்று, வழிபாடியற்றி அங்கு நடைபெறும், பஜனை மற்றும் நாம சங்கீர்த்தனம், சமய சொற்பொழிவுகள் முதலியவற்றிலும் கலந்துகொண்டு, சுவர்க்கவாயில் திறத்தல் எனும் அதிசிறப்பான தரிசனம் கண்டுகளித்து நாராயணன் திருவருளைப் பெறவேண்டும்.

**சுவர்க்க வாசல் திறத்தல்**

இன்றையதினத்தில் விஷ்ணு பகவான் வைகுண்ட லோகத்திலிருந்து சொர்க்க லோகம் வருகை தந்து தன் பக்தர்களுக்கு திருவருள் பாலிக்கின்றார் என்கின்றன புராணங்கள். இதனை வெளிப்படுத்தும் வகையிலேயே இன்றைய தினத்தில் விஷ்ணு ஆலயங்களில், சுவர்க்க வாயில் திறத்தல் எனும் அதிஉயர் செயற்பாடு சிறப்புற நடைபெறும். ஆகவேதான் இன்றையதினம் தங்கள் வாழ்வின் விதி முடிந்து உயிர்துறக்கின்றவர்கள் அக்கணமே சொர்க்கலோகம்தனை வந்தடைவர் என்பது உறுதியான மொழியாகும். மேலும் இன்றைநாளில் இறந்த முன்னோர்களுக்கான மோட்ச அர்ச்சனை செய்தல் செயற்பாடும் சிறப்புற அரங்கேறும்.

ஆகவே இத்தகைய சிறப்புக்களை தன்னகத்தே கொண்ட இவ் வைகுண்ட ஏகாதசி விரத நன்நாளில், இவ்விரதத்தை அனுஷ்டித்து, அல்லது கடைப்பிடித்து, தாமரை போன்ற கண்களைக் கொண்டவனும், அகன்ற தேவர் உலகத்தவரால் போற்றப்படுபவனும், வாசனை மிகுந்த குளிர்ச்சியான துளசி மாலையை அணிந்தவனும், திருமகள் விருப்புடன் பாத பூஜை செய்கின்ற திருமகள் தலைவனும், அடியவர் குறைகளை போக்கி அருள்பவனுமாகிய பகவான் விஷ்ணுவின் திருவருள் எனும் கருணையைப் பெற்று வாழ்வின் இறுதி இலக்கான மோட்சம் எனும் நிலையினைப் பெறுவோமாக.



# 2021 உங்கள் ராசிக்கு எப்படி?

## ஆங்கிலப் புத்தாண்டு பலன்கள்




இன்னும் சிறிது நாள்களில் கடக்க இருக்கும் 2020 ஆம் ஆண்டின் முடிவுக்காக எம்மில் பலரும் ஆர்வமாகக் காத்துக் கொண்டிருக்கிறோம். இந்த வருடம் போல் எப்போதும் உலக மக்கள் துயரத்தைச் சந்தித்திருக்கமாட்டார்கள். 2020ஆம் ஆண்டைக் கடக்க இருக்கும் நிலையில், வர இருக்கும் புதிய 2021 ஆம் ஆண்டைப் பற்றிய பயமும் தொற்றிக் கொண்டுள்ளது. இந்த ஆண்டாவது உலக மக்களுக்கு சுபீட்சத்தைத் தருமா? என்கிற எதிர்பார்ப்பு ஒவ்வொருவருக்கும் அதிகமாகவே இருக்கிறது என்று கூறலாம். அவ்வகையில் வர இருக்கும் 2021ஆம் ஆண்டுக்கான பலன்கள் இங்கு தரப்படுகின்றன.

விருச்சிக ராசிக்காரர்களை பொறுத்தவரை வருகின்ற 2021ஆம் ஆண்டு மிகவும் அற்புதமான பலன்களை கொடுக்கப் போகிறது. ஆண்டின் தொடக்கத்தில் சுமாராக இருந்தாலும், ஏப்ரல் மாதத்துக்கு பிறகு வெற்றி நடை போடுவீர்கள். இதுவரை உங்களுக்கு இருந்து வந்த பிரச்சனைகள் படிப்படியாக நீங்கும். குறிப்பாக நிலுவையில் இருந்த கடன் தொகைகள் தீரும் யோகமும் உண்டு. உங்கள் ராசிக்கு சனி பகவான் மூன்றாமிடத்தில் அமர்ந்திருப்பார். கேது பகவான் முதல் வீட்டிலும், ராகு 7வது வீட்டிலும் அமர்ந்திருப்பார்கள். மற்ற கிரகங்கள் பெயர்ச்சி ஆகிக் கொண்டே இருக்கும். இந்த கிரக நிலையின் அடிப்படையில் உங்களுக்கு உரிய பலன்களை இனி காண்போம்.

**குடும்பம்:** விருச்சிக ராசிக்காரர்கள் குடும்பத்தின் மீது அதிக பற்று உடையவர்களாக இருப்பார்கள். குடும்பத்தைப் பொறுத்தவரை இந்த ஆண்டு நிறைய சவால்களை எதிர்கொள்வீர்கள். ஆண்டின் தொடக்கத்தில் பெற்றோருடைய ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது மிகவும் நல்லது. அடுத்து வரும் காலகட்டத்தில் குடும்பத்தினரின் ஆதரவு உங்களுக்கு இருக்கும். உங்களுடைய முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பார்கள். உடன்பிறப்புகளோடு இணக்கமாக செல்வீர்கள். சுப காரிய நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்குரிய யோகம் உண்டாகும். அவ்வபோது குடும்பத்தில் குதூகலத்துடன் மகிழ்ச்சி நிறைந்து காணப்படும். ஆண்டின் இறுதியில் உற்றார், உறவினர்களை அனுசரித்து செல்வது மிகவும் நல்லது.

**வியாபாரம் மற்றும் தொழில்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் சனி பகவான் 3வது இடத்தில் அமர்ந்திருப்பதால் நீங்கள் அதிகம் உழைப்பை கொடுக்க வேண்டிய நிலையில் இருப்பீர்கள். உங்களுடன் போட்டி போடுபவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு வாய்ப்புகள் உண்டு. எனவே சோர்வு ஏற்பட்டாலும், சோம்பலைத் தவிர்த்து உற்சாகத்துடன் நீங்கள் பணி புரிந்தால் மட்டுமே முன்னேற்றத்தைக் காண முடியும். ஆண்டின் நடுப்பகுதியில் பண ரீதியான விஷயத்தில் சற்று எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது மிகவும் நல்லது. புதிய முயற்சிகளை அந்நேரத்தில் தள்ளிப் போடுவது உத்தமம். ஆண்டின் இறுதியில் நல்ல அதிர்ஷ்டமான நேரமாக இருக்கும். புதிய முதலீடுகளைச் செய்வீர்கள்.

**உத்தியோகம்:** உத்தியோகத்தில் இருக்கும் விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த ஆண்டு சிறப்பாக இருக்கும். வெளிநாடு செல்ல விருப்பம் உள்ளவர்கள் ஆண்டின் இறுதியில் அதற்குரிய சாதகமான பலன்களை காணலாம். இடமாற்றம் எதிர்பார்ப்பவர்களுக்கு எதிர்பார்த்த வாய்ப்புகள் அனுகூலமான பலன்களை கொடுக்கும். மார்ச் முதல் ஒக்ரோபர் வரையிலான காலம் உங்களுக்கு சுமூகமாக செல்லும். அதன் பிறகு ஆண்டின் இறுதியில் நல்ல மாற்றங்களும், அதிர்ஷ்டங்களும் ஏற்படலாம். புதிய புதிய விஷயங்களை கற்றுக் கொள்வதில் ஆர்வம் செலுத்தினால் முன்னேற்றம் உண்டாகும்.

**பொருளாதாரம்:** பொருளாதார ரீதியான முன்னேற்றத்தில் இவ்வாண்டு விருச்சிகம் ராசிக்கு நல்ல பலன்கள் கிடைக்கும். ஆண்டின் தொடக்கத்தில் செலவுகள் அதிகரித்தாலும், பணம் பல வழிகளில் வந்து பொக்கெட்டை நிரப்பும். வழக்கு தொடர்பான விஷயங்களில் வெற்றி காண்பீர்கள். அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் வாங்கும் முயற்சிகளில் இருப்பவர்களுக்கு படிப்படியான முன்னேற்றம் இருக்கும். உங்களுக்கு வர இருக்கும் விரயங்களை சுப விரயங்களாக மாற்றிக்கொள்வது புத்திசாலித்தனம்.

**பெண்களுக்கு:** விருச்சிக ராசியில் பிறந்த பெண்களுக்கு மிகவும் நல்ல பலன்கள் உண்டாகும். மே மாதத்தில் சில தேவையில்லாதக் மனக் கஷ்டங்களை சந்திக்கலாம். ஆண்டின் தொடக்கத்தில் உங்களுக்கு உடல்நிலை பாதிப்புகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு. ஒக்ரோபர் மாதத்திற்கு பின்னர் அதாவது ஆண்டின் இறுதிக்கட்டத்தில் சுபகாரிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மனதுக்கு பிடித்தவர்களை மணந்து கொள்ளும் வாய்ப்புகள் உண்டு. தைரியம் மற்றும் தன்னம்பிக்கை உங்களுக்கு பலமாக அமையக்கூடும் என்பதை நினைவில் வையுங்கள்.

**பரிகாரம்:** குடும்பத்துடன் இறை வழிபாடுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்தால் மிகவும் நல்லது. வீட்டின் மொட்டை மாடியில் பறவைகளுக்கு தானியமும், தண்ணீரும் வைக்க தோஷங்கள் நீங்கும். உங்களால் முடிந்த அளவுக்கு ஏழைக் குழந்தைகளுக்கு படிப்புக்கு தேவையான உதவிகளை செய்யுங்கள், நல்ல மாற்றங்களைக் காண்பீர்கள்.



## திறன் வகுப்பறை கட்டடம் திறப்பு

முல்லைத்தீவு,டிசெ.25

விசுவமடு திறன் விருத்தி நிலையத்தில், ரத்னம் அறக் கட்டளை அனுசரணையில் திறன் வகுப்பறை கட்டம் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் வினோகராதலிங்கம், திறன் வகுப்பறையைத் திறந்து, பெயர் பலகையையும் திரைநீக்கம் செய்தார்.

நிகழ்வில் சீ.எப் சீ.டீ.நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பி.யோகநாதன் பெரண்டினா, தொழில் வளநிலைய முகாமையாளர் சிவஞானம், நிறுவனக் கல்வி நிர்வாகிகள் மற்றும் திறன் விருத்தி மாணவர்கள்,மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர். (க-இ)


## றோட்டரிக் கழகத்தின் உதவிகளை வரவேற்றார் அமைச்சர் சுதர்ஷினி



கொழும்பு, டிசெ. 25

சுகாதாரத் துறையின் வளர்ச்சிக்காக றோட்டரிக் கழகத்தால் வழங்கப்படும் உதவிகளை வரவேற்கிறேன் என்று ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோயியல் தடுப்பு மற்றும் கொவிட் தொற்றைத் தடுப்பதற்கான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ பிள்ளை தெரிவித்துள்ளார்.

சுகாதாரத்துறையை முன்னேற்றுவது சுகாதார அமைச்சின் பொறுப்பாக இருந்தாலும் நாட்டு மக்களதும் சுயாதீன அமைப்புகளதும் ஒத்துழைப்பும் அவசியமாகும். மருத்துவமனைகளில் அவசர சிகிச்சைப் பிரிவுகளுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய தருணத்தில் றோட்டரிக் கழகத்தால் வழங்கப்பட்ட உதவிகளை வரவேற்பதுடன், கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக எதிர்வரும் காலத்தில் முகங்கொடுக்க நேரிடும் சவால்களுக்கு சுகாதாரத் துறையை முன்னேற்ற வேண்டும். இந்தச் செயற்பாடுகளுக்கு இலங்கையின் றோட்டரிக் கழகம், மற்றும் ஆஸ்திரேலிய றோட்டரிக் கழகத்தால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பை வரவேற்பதுடன், இதற்கு முன்னர் போலியோத் தடுப்பூசிகளை பெற்றுக் கொடுப்பதற்காக றோட்டரிக் கழகத்தால் வழங்கப்பட்ட உதவிகளையும் நினைவு கூருகிறேன் என்றார். (ஐ)



## இலங்கை – தென்னாபிரிக்கா சுற்றுலாத்துறை ஒப்பந்தம்

*அமைச்சரவை அங்கீகாரம்*

கொழும்பு,டிசெ.25

இலங்கைக்கும் தென்னாபிரிக்காவுக்கும் இடையில் சுற்றுலாத்துறை பங்களிப்புக்கள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2018 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இலங்கை - தென்னாபிரிக்கா கூட்டுக் கழகத்தின் ஆறாவது அமர்வில் இரு தரப்பினருக்குமிடையே சுற்றுலாத்துறை பங்களிப்புக்கள் தொடர்பான புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய, இருதரப்பினருக்குமிடையே புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ-இ)

# போராடும் நிலையை அரசே ஏற்படுத்தியது

## மன்னார்.மீனவர் சமாச செயலர் சீற்றம்

மன்னார், டிசெ.25

இந்திய மீனவர்களின் பிரச்சினைகளை பல வருடங்களைக் கடந்து நாங்கள் முகம் கொடுத்துக் கொண்டு இருக்கின்றோம். அரசு வழங்கிய காலக்கெடு நிறைவடைந்த நிலையில் இந்திய மீனவருக்கு எதிராக போராடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்க சமாச செயலாளர் என்.எம். ஆலம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; சம காலத்தில் வட மாகாணத்தில்



குறிப்பாக மன்னார் மாவட்ட மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.குறிப்பாக இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு பல வருடங்களாக முகம் கொடுத்து வருகிறோம். 10 வருடங்களுக்கு மேற்பட்ட பிரச்சினையாக அந்தப் பிரச்சினை இன்று காணப்படுகின்றது. பல்வேறு கட்டப் பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல விட்டுக் கொடுப்புக்கள் இடம் பெற்றன. இறுதியாக 2016 ஆம் ஆண்டு பேசப்பட்டு, அவர்களால் முன் வைக்கப் பட்ட காலமும் நிறைவடைந்து இன்று அதற்காகப் போராட வேண்டிய நிலையை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது என்றார். (ப-56)

# இலங்கையிலும் விரைவில் கொவிட் தடுப்பு மருந்துகள்

### தேசிய ஆராய்ச்சி பேரவை பச்சைக்கொடி

கொழும்பு, டிசெ.25

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தக் கூடிய நான்கு மருந்துகளுக்கு தேசிய ஆராய்ச்சி பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

"ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் அஸ்டிராஜெனேகா, மொடேர்னா, பைசர், பயோன்டெக் ஆகிய மருந்துகள் மற்றும் ரஸ்யாவின் ஸ்புட்னிக் மருந்து ஆகியவற்றுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நான்கு மருந்துகளும் இலங்கையில் பயன்படுத்துவதற்கு பொருத்தமானவை. இந்த நான்கு மருந்துகளில் இலங்கைக்கு பொருத்தமான மருந்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சுகாதார அமைச்சுக்குத் தெரிவித்துள்ளோம்.

இது குறித்த ஆவணங்கள் சுகாதார அமைச்சிடமும் கொவிட்19 தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளேயிடமும் வழங்கப்பட்டுள்ளன.

மார்ச் மாதமளவில் மருந்துகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறலாம்" என தேசிய ஆராய்ச்சி பேரவையின் தலைவர் ஹெமந்த டொடாம்ப ஹல தெரிவித்துள்ளார். (ந-இ)

## முகக்கவசம் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ.25

யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த சுகாதாரத் தொண்டர்களுக்கு முகக்கவசம் மற்றும் கையுறை என்பன நல்லூர் லயன்ஸ் கழகத்தால் வழங்கி வைக்கப்பட்டன என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ரி5-17)

## சங்கிலி அறுத்தோர் மறியலில்!

முல்லைத்தீவு, டிசெ.25

குமுழமுனை அளம்பில் பகுதியில் பெண்களிடம் தங்கச் சங்கிலிகளை அபகரித்த இருவர் அரச புலனாய்வாளர்களால் பிடிக்கப்பட்டு முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் இவர்கள் வெலிஓயா பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இருவரையும் நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது, எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ற-19)

# திடீர் மரண பரிசோதகர் பதவிக்கு 302 வெற்றிடங்கள்

கொழும்பு,டிசெ.25

நாடு முழுவதும் நிலவும் திடீர் மரண பரிசோதர்களுக்கான பற்றாக்குறையை, விரைவில் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, நீதி அமைச்சர், அலி சப்ரி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் 302 திடீர் மரண பரிசோதகர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. காலதாமதமின்றி சேவைகளை வழங்குவதற்காக, உடனடியாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீதி அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதனடிப்படையில், வெற்றிடங்கள் தொடர்பில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, ஒன்லைன் ஊடாக தகுதி வாய்ந்தோர் தெரிவு செய்யப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# உடற்கல்வி ஆசிரியர் இடமாற்றம்; காலவரையறை வழங்க ஏற்பாடு!

யாழ்ப்பாணம், டிசெ.25

யாழ் மாவட்ட உடற்கல்வி ஆசிரியர்களின் இடமாற்றத்தை கால வரையறையுடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். ஆசிரியர்கள் தமக்கான இடமாற்றத்தில் கால வரையறை இடப்படாது இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அதில் கால வரையறை இடப்பட்டு தமக்கான இடமாற்றம் வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தக் கோரிக்கையை அவதானத்தில் கொண்ட அமைச்சர் துறைசார் தரப்பினரின் கவனத்துக்கு கொண்டு சென்று அதற்கான தீர்வை பெற்றுக்கொடுத்துள்ளார். (ற-இ)



# இன்றைய நாள்

**மேடம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வாழ்த்துச் செய்தி மகிழ்விக்கும். உங்களின் முன்னேற்றத்துக்கு வித்திட்ட ஒருவரைச் சந்திக்க நேரிடும். பணியாளர்கள் எந்த வேலையையும் கவனமுடன் செய்வது அவசியம்.

**இடபம்:** அன்பாக பேசுவதன் மூலம் சிக்கல்களை பெரிதாகாமல் தீர்க்கலாம். நிம்மதியாக உணர்வீர்கள். சிலருக்கு பணிச்சுமை அதிகமாகலாம். தந்தை வழி உறவினர்கள் உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** சரியான ஓய்வு கிடைக்காமல் இருந்த நிலை இப்போது மாறும். வீட்டுச்செலவுகள் அதிகமாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. மகிழ்ச்சியாக பொழுதைக் கழிப்பீர்கள்.

**கடகம்:** மேலதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. உங்கள் வளர்ச்சிக்கு பிறரால் நெருக்கடி ஏற்படாமல் கவனமாக இருங்கள். உங்கள் துறையில் கடுமையாக முயற்சி செய்து வெல்வீர்கள்.

**சிம்மம்:** உங்களது உரிமைகளை எப்போதும் விட்டுக்கொடுக்க மாட்டீர்கள். புத்திக் கூர்மையால் எதையும் முடித்துப் பரபரப்பாக இருப்பீர்கள். நல்ல வரன்களுக்காக காத்திருப்போருக்கு நற்செய்தி வரும்.

**கன்னி:** வருமானம் திருப்தி தரும். சிலர் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அடுத்தவர் சுதந்திரத்தில் அநாவசியமாகத் தலையிட வேண்டாம். அன்போடு பழகிய ஒருவர் குழப்பத்தை அகற்றுவார்.

**துலாம்:** கடன் பிரச்னைகள் குறையத் தொடங்கும். ஆசை நிறைவேறும். வாழ்வில் நல்ல திருப்பம் ஏற்படும். நட்பு வட்டம் விரிவடையும். மேலதிகாரிகள் ஆதரவாக நடந்து கொள்வார்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் இதுவரை தள்ளிப்போன சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்க இப்போது வாய்ப்புள்ளது. திட்டமிட்டு செயல்படுவது நல்லது.

**தனுசு:** புதிய தொழில் தொடங்குவோர் நன்கு ஆலோசித்து முடிவு எடுக்கவும். சிலருக்கு விரும்பாத இடத்தில் பணிபுரிய வேண்டிய வாய்ப்பு வரலாம். சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள்.

**மகரம்:** சோகமாக இருந்த முகம் மலர்ச்சி அடையும் நாள். பெண்களுக்கு முகத்தில் அழகும், மனதில் இளமையும் கூடுதலாகும். புதிய வாகனம் வாங்குவீர்கள். சேமிப்பு அதிகரிக்கும்.

**கும்பம்:** நீங்கள் எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும் நாள். அதிக வட்டிக்கு வாங்கிய கடனில் ஒரு பகுதியை அடைப்பீர்கள். நற்பலன்கள் கூடும்.

**மீனம்:** சொந்த வேலையுடன் மற்றவர்றையும் பார்க்க வேண்டி வரும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உதவி கிடைக்கும். வீட்டில் சுபநிகழ்ச்சி ஏற்பாடுகளை விரைந்து செய்வீர்கள்.

# வீடொன்றில் கலாசார சீரழிவு கைதான மூவருக்கு மறியல்

யாழ்ப்பாணம்,டிசெ.25

கோண்டாவிலில் வீடொன்றில் கலாசார சீரழிவு நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவரை, எதிர்வரும் ஜனவரி மாதம் 6 ஆம் திகதிவரை விளக்கமறிய லில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கோண்டாவில் உப்பு மடம் சந்திக்கு அண்மையாக உள்ள வீடொன்றில் கலாசார சீரழிவு இடம் பெற்றுள்ளது.

அதிகாரிகளால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் மாவட்ட சிறப்புப் பொலிஸ் பிரிவினர் அந்த வீட்டைச் சோதனைக்கு உட்படுத்தினர். அங்கு கோப்பாய் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பெண் ஒருவரும், ஆண் ஒருவரும், கொடிகாமம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் விசாரணைகளின் பின்னர், யாழ்ப்பாணம் நீதிவான் நீதி மன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்ட னர். சட்டத்துக்குப் புறம்பாகச் செயற்பட்டமை தொடர்பில் மூவருக்கும் எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதி மன்றில் பி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மு.றெமிடியஸ், பிணை விண்ணப்பத்தை முன்வைத்து சமர்ப்பணம் செய்தார்.இரு தரப்பு விண்ணப் பங்களையும் ஆராய்ந்த யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நளினி சுபாகரன், சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (க-26)

## மரண அறிவித்தல்



### திருமதி செல்லாச்சி பாலசிங்கம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியர்- சாவகச்சேரி மகளிர் கல்லூரி)*

**தோற்றம் : 09.08.1943 / மறைவு : 24.12.2020**

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, கல்வயலை இருப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி செல்லாச்சி பாலசிங்கம் அவர்கள் 24.12.2020 வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, தோரைப்பிள்ளை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான தம்பு பாக்கியலட்சுமி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற பாலசிங்கத்தின் ஆசை மனைவியும் காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி, சிவபாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மோகனலதா, கேதீஸ்வரன், பகீரதன், தர்சினி, ரேணுகா ஆகியோரின் அன்புத்தாயாரும் சிவஞானசுந்தரம், பாமா, சுதர்சினி, ரமணன், சுதேசன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அர்ஜுனா, கஸ்தூரி, மகேந்திரராஜ், மாதுரி, பிரணவன், தக்ஷனி, ஸ்ருதி, பிரதோஷ், சாசாங்கன், திவானி, மாதங்கி, சேயோன், ஆதவன், சஞ்ஜயன், திவ்ஜானி ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் பிரணீத், அஸ்விகா ஆகியோரின் அன்புப்பூட்டியும் அமரர் முருகேசு, அமரர் வினாசித்தம்பி, அமரர் முத்துப்பிள்ளை, சிவயோகநாதன், இராமநாதர் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் அமரர் அன்னபூரணம், யோகம்மா, அமரர் சாவித்திரிதேவி, அமரர் மார்க்கண்டு, சறோஜினி, அமரர் பூபதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 25.12.2020 இன்று வெள்ளிக்கிழமை இல.292, வைத்தியசாலை வீதி, களுபோவிலையில் உள்ள ஜெயரட்ண மலர்ச்சாலையில் காலை 7.30 -10.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 10.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
இல. 16A, அத்தப்பத்து வீதி, தெஹிவளை.
Tel : 0777 272133, 077 3425906

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் யோகேஸ்வரி அப்பையா



மலர்வு 08.09.1947
உதிர்வு 18.12.2018

திதி:பூர்வபக்க ஏகாதசி
(25.12.2020)

குடும்பத்தின் குலவிளக்கே - அம்மா
ஆசைமுகம் மறைந்து அவலம்தான்
சூழ்ந்ததுவோ
பெற்றவர் உற்றவர் பெருமை கொள்ள
பேரொளியாய் ஒளிர்ந்தீர் அம்மா
உமைக் காக்கப் போராடினோம் -
முடியவில்லை
வாழ்வை வென்று வானுலகம் சென்று விட்டீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

'அம்பிகை வாசம்'
புலோலி தென்மேற்கு, புலோலி.

குடும்பத்தினர்.

## மாமரக் கன்று விநியோகம்

தென்மராட்சி பிரதேச கல்வயல் கிராம அலுவலர் பிரிவில் நேற்று வீட்டுத் தோட்டப் பயனாளிகளுக்கு மாமரக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. ஜனாதிபதியின் மனைப் பொருளாதாரத்தை வலுப் படுத்தும்வேலைத்திட்டத்தின் கீழ் பிரதேச சமுர்த்தி அலகின் ஊடாக வீட்டுத் தோட்டப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு விவசாயப் பயிர்களும் விதைகளும் அண்மையில் வழங்கப்பட்டன. அவர்களில் மாமரக் கன்றுக்கு விண்ணப்பித்த பயனாளிகளுக்கு நேற்று மாமரக் கன்றுகள் வழங்கப்பட்டன. 2 ஆயிரத்து 320 மாமரக் கன்றுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## மரண அறிவித்தல்



### திரு.பாலகிருஸ்ணன் கிருஸ்ணகுமார்

மண்டைதீவு 7ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் சென் ஆன்ஸ் வீதி, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட பாலகிருஸ்ணன் கிருஸ்ணகுமார் நேற்று (24.12.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலகிருஸ்ணன் அன்னலக்சுமி (நல்லம்மா) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி மற்றும் இராசமணி அவர்களின் அன்பு மருமகனும், பேரின்பநாயகி (ஆசிரியை, ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை) அவர்களின் பாசமிகு கணவனும், யதீசன், கவிநயா ஆகியோரின் அன்பு தந்தையும், கிருஸ்ணராஜாவின் பாசமிகு சகோதரனும், வினோதினி மற்றும் பாலகிருஸ்ணன், வேலும்மயிலும், குகநாதன், தனராஜ், தபோதினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சோதிலிங்கம், செல்லாச்சி தம்பதியரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2020) வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சென் ஆன்ஸ் வீதி, மானிப்பாய்.
தகவல் :குடும்பத்தினர்.
077 615 2322, 0777 065 322

## மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 08 . 1941



மறைவு
23 . 12 . 2020

சுழிபுரம் - மேற்கு

### பொன்னம்பலம் வைத்திலிங்கம்

**இளைப்பாறிய இலங்கை அரச மருந்தகவியலாளர் -**
**பிரித்தானியா தேசிய சுகாதார சேவைகள் (NHS) மருந்தகவியலாளர்.**

சுழிபுரம் - மேற்கை பிறப்பிடமாகவும் பிரித்தானியாவை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் வைத்திலிங்கம் அவர்கள் 23.12.2020 புதன் முன்னிரவு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானியார் பொன்னம்பலம் - செல்லம் தம்பதியரின் இளைய புத்திரனும், காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் பரமேஸ்வரி (நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், இராகுலன், தயாளினி, காயத்திரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகந்தினி, சிவகணேஸ், சுரேன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சனா, இலக்கியன் ஆகியோரின் அன்பு பேரனாரும் காலஞ்சென்றவர்களான இலட்சுமியார், பூரணம் (பெரியபிள்ளை) பரமலிங்கம், கார்த்திகேசு, பூமாதேவி மற்றும் நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கிருஷ்ணர்-வள்ளியம்மை தம்பதியரின் பெறா மகனும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், சிவபாதசுந்தரம், சிவசிதம்பரம், ஞானேஸ்வரி, பரமேஸ்வரன் மற்றும் பரமேஸ்வரி, மகேஸ்வரி, சிவப்பிரகாசம், குகனேஸ்வரி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், நடராசா, துரைசிங்கம் மற்றும் மகிழ்தேவி, விஜயசுந்தரி, சிவனேஸ்வரன், ரவி, கீதாஉஷா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஞானேஸ்வரி, சிவசண்முகமூர்த்தி, இரவீந்திரன், மைதிலி மற்றும் காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரி, லோகநாதன், ஆறுமுகம், சிவநாதன் ஆகியோரின் அன்பு தாய் மாமனாரும், தயாளன், நித்தியாஅருணா, நிர்மலா, மிருணாளினி ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: +447802604567
0777 550 949

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் பதிவாளர் நாயகம் திணைக்கள வடக்கு வலய அலுவலகத்தில் பிரதிப்பதிவாளர் நாயகமாகக் கடமையாற்றும் **செல்வி ஆனந்தி ஜெயரட்ணம்** அவர்களின் பாசமிகு சகோதரியார்

**செல்வி தர்சினி ஜெயரட்ணம்**

அவர்கள் கடந்த 30.11.2020 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிக்கழகம்
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

## விற்பனையாகிறது

**நத்தார் தினத்தன்று**
**எமது பண்ணையில் வளர்க்கப்பட்ட புறொயிலர், கல்பேட், கோழிகளை இறைச்சியாகவும்** மற்றும் **25 ஆம், 26 ஆம் திகதிகளில் ஊர்க்கோழி** 1kg 500/= உம் **விறாத்துக்குஞ்சு** 300/= விற்கும்

**பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்**

- துர்க்காமில் அருகில் - மானிப்பாய்
- கராஜ் அருகில் - சண்டிலிப்பாய்
- பாணாவெட்டி - சுழிபுரம்
- சத்தியக்காடு - பண்ணாகம்
- பண்டத்தரிப்பு - மதவடி
- விளான் - தெல்லிப்பழை வீதி

**077 271 8149, 0041 7792 43687**

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் தனியார் விருந்தினர் விடுதி ஒன்றுக்கு பகுதிநேர/முழு நேரமாக Room Boy வேலைக்கு ஆட்கள் தேவை

தொடர்புக்கு:077 192 3607

## வீடு வாடகைக்கு தேவை

அரச தொழில் புரியும் மூன்று பேர் கொண்ட குடும்பத்திற்கு தெல்லிப்பழை அல்லது பாதுகாப்பான சூழலில் வசதியான வீடு வாடகைக்குத் தேவை.

**076 293 2468**

## வீடு வாடகைக்கு

G.P.S வீதியில் 05 அறைகளுடன் நல்ல சூழலில் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு. முற்பணம் 300,000/= மாதவாடகை 10,000/=

**070 271 3564**


## சிவனொளிபாத மலைக்கு வருவதைத் தவிர்க்கவும்

நுவரெலியா, டிசெ.25

கொரோனா நிலைமை காரணமாக சிவனொளிபாத மலைக்கு வருவதைத் தவிர்க்குமாறு நுவரெலிய மாவட்ட கொரோனாத் தடுப்பு பிரிவினர் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். சிவனொளிபாத மலைக்கு பக்தர்கள் யாத்திரை அதிகம் வருவதனால் கொரோனா தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் உள்ளோம் என கொரோனா தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (ரி5-இ)


## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

NPGOxxxx தொடரிலக்கம் உடைய JAPAN YAMAHA MATE மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- **078 578 6232**

## 12 ஆவது ஆண்டு நினைவஞ்சலியும் பிறந்தநாள் வாழ்த்தும்



பிறப்பு 25 . 12 . 1935
இறப்பு 07 . 01 . 2009

**ஆண்டி முருகையா**

திதி: சொர்க்கவாயில் ஏகாதசி

அன்புடனும் பண்புடனும் வளர்த்த - எங்கள்
அன்புத் தெய்வமே
நீங்கள் இல்லாத உலகம் என்றும்
இருள் மயமானது
எங்கே காண்போம் உங்கள்
மலர்ந்த முகத்தை!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

தியேட்டர் வீதி,
இணுவில்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 08 . 10 . 1951
விண்ணில் 25 . 12 . 2016

**அமரர் வல்லி சிதம்பரநாதன்**

நாள்கள் பல கடந்தும் வருடங்கள் ஆனாலும்
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
ஆறவில்லை எம் இதயம் எம் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் என்றும் எம் நினைவில்...
உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.

27/15, நக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

சிதம்பரநாதன் குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 . 11 . 1943
மறைவு 06 . 01 . 2020

**மாணிக்கம் செல்லத்துரை**

திதி: சொர்க்கவாயில் ஏகாதசி (வளர்பிறை)

ஆண்டொன்று ஆனதப்பா எமைப்பிரிந்து நீங்கள் சென்று
ஆறாத துயரங்கள் நெஞ்சோடு எந்நாளும்
மறந்திடவே முடியாத உறவெமக்கு நீங்களப்பா
பார்க்குமிடமெலாம் உங்கள் நினைவு எங்களுக்கு
சுவர்க்க வாயில் திதி அதனில் கண்ணன் தான் அழைத்தானோ!
மாயவனின் பாதத்தில் இளைப்பாற வேண்டுகின்றோம் அப்பா!

வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

நீங்கா நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

**செல்லையா நடராசா**

**தோற்றம் : 12.10.1938** **மறைவு : 24.12.2020**



எழுதுமட்டுவாள் வடக்கு, மருதங்குளத்தை பிறப்பிடமாகவும் பெரியபளை, பளையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நடராசா அவர்கள் நேற்று (24.12.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பொன்னாச்சி அவர்களின் அன்புக் கணவரும், கந்தையா, அன்னபாக்கியம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், லோகநாதன் (ஓய்வு பெற்ற கிளிநொச்சி விவசாய களஞ்சியக் காப்பாளர்), இலங்கேஸ்வரன் (விவசாய அலுவலகம்-பரந்தன்), அமரர் பிறேமவாசன் (பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம்), தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மகுலதேவி (ஓய்வு பெற்ற கிராம அலுவலர்), சுபத்திராதேவி, பிரபலோஜினி (ஆசிரியர்- எழுதுமட்டுவாள் அ.த.க. பாடசாலை), குகராசா (பளை-பிள்ளையார் அழகுமாட உரிமையாளர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுஜிதன் (People's Insurance), நேருஜா (வைத்தியர்), நிறோஜா (கால்நடை வைத்தியசாலை - சண்டிலிப்பாய்), சாரங்கா, திவ்வியா, பௌவினா, பௌவினன், அபிஷாஜினி, அதீதனா ஆகியோரின் பேரனும், வருண்காந்தின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2020) வெள்ளிக்கிழமை பெரியபளை பளையிலுள்ள மகளின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பல் 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக மலையான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
சி.குகராசா (மருமகன்)


## வாழ்வாதார உதவி

முல்லைத்தீவு, டிசெ.25

முல்லைத்தீவு மாவட்டத்தின் மூங்கிலாறு கிராமத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவியாக பசுவும் கன்றும் வழங்கப்பட்டன. தாயக விருட்சம் சுவிஸ் அறக்கட்டளையின் ஒழுங்கமைப்பில் மறந்தும் கடந்துசெல்ல முடியாத வாரம் என்ற தொனிப் பொருளில் சுவிஸ் நாட்டில் வசித்து வருபவரின் நிதிப் பங்களிப்பில் இந்த உதவி வழங்கப்பட்டது.

தாயக விருட்சம் சுவிஸ் அறக்கட்டளை ஊடாக தொடர்சியாக பல்வேறுபட்ட சமூகப்பணிகள் வடக்கு கிழக்கு எங்கும் நடைபெற்று வருகின்றன.(ர-222)

## இருவர் கைது

கிளிநொச்சி, டிசெ.25

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் பகுதியில் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய 6 லீற்றர் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஒருவர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

இதேவேளை, புளியம்பொக்கணைப் பகுதியில் அனுமதிப்பத்திரத்துக்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் டிப்பர் வாகனம் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-113)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 27 . 12 . 1935

அம்பிகை திருவடியில் 18 . 12 . 2018

## அமரர் உயர்திரு
## சங்கரப்பிள்ளை திருநாவுக்கரசு (J.P)

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தரும், முன்னாள் நயினாதீவு நாகபூஷணியம்மன் கோயில் அறங்காவலர் சபை தலைவரும், அகில இலங்கை சமாதான நீதவானும், முன்னாள் மரணவிசாரணை அதிகாரியும்)


மலர்முகம் கண்டே உள்ளம் கனிந்தோம் - அப்பா
உம் நிழலில் இருந்து வாழ்ந்தனை மறவோம் - அப்பா
நீர் எம் வாழ்வின் வழிகாட்டி
பாசம் ஒன்றைத் தவிர வேறென்ன நாம் தந்தோம் - அப்பா
வந்தவர் எல்லாம் போவது உண்மை
விதியென ஒன்று உண்டென அறிந்தோம் - அப்பா
சிந்தனை எமக்குத் தோன்றிய போதும்
நெஞ்சில் செப்பிட முடியாத்துயரே மோசம்!
உந்தனை இழந்த உணர்வே மிஞ்சும் - என்றும்
உள்ளத்தில் உமது நினைவே துஞ்சும்
வந்தனை செய்வோம் வாழும் வரையில் - எம்
சோகம் சொல்லவும் வார்த்தை இல்லை - அப்பா
எங்ஙனம் எம் அம்மாவின் கண்ணீரில் உங்கள் பிள்ளைகள்
ஆறமுடியாத சோகம் தான் இங்கே இரண்டு - ஆண்டுகள்
உருண்டு சென்றாலும் என்றென்றும் மறவோம்
உமது காலடித் தடங்களை....

3 ஆம் வட்டாரம்
நயினாதீவு.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07 . 07 . 1942

மறைவு 06 . 01 . 2020

## அமரர் சுந்தரம் சின்னராஜா

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழி காட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்


முருகமூர்த்தி வீதி,
இல.40/45, வயல்கரை வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் இராமச்சந்திரன் சிவகுமார்

(சிவா / மைந்தன்)



அன்னை மடியில் 06.08.1971

ஆண்டவன் அடியில் 24.12.2012

திதி: பூர்வபக்க ஏகாதசி

தெய்வத்தேவனே தேயாத வானிலவே!
தேடிப்புலம்புகின்றோம் தேம்பி அழுகின்றோம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தி எல்லாம் மறந்திடுமோ
உன் வார்த்தைகளைத் தேடுகின்றோம்
- வாஞ்சைக்குரியவனே-

செல்வமகராசவே உன் மாளிகை வெறுமையாக
சோர்ந்துவிட்டடோம் நாம் சொல்லியழ வார்தையின்றி
நீயற்ற வாழ்வு நீண்ட துன்ப காலம் ஐயா - நாம்
நிம்மதி இழந்தோம் நீண்ட தூரம் போனதெங்கே?
பாசமுடன் நீ வளர்த்த ஆசை மகள் வளர்ந்து - உன்
வழிகாட்டலின்றி வாடி நிற்கிறாள்
எல்லாம் இருந்தும் ஏதும் அற்றவர்களாக
ஏங்கித் தவிக்கின்றோம் எங்கு ஐயா சென்றுவிட்டாய்
பாசமானவனே நீ ஓடி மறைந்து இன்றுடன்
எட்டு ஆண்டுகள் சென்றதையா
பரிதவிக்கும் அம்மா, மனைவி, பிள்ளை உன்
உடன் பிறப்புகள் உறவுகள் எல்லாம்
உன்னைக்காணாது ஏங்கித்தவிக்கின்றனர்
எப்போ நீ வருவாய் ஐயா!
உன் ஆத்ம சாந்திக்காக அனுதினமும் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி... ஓம் சந்தி... ஓம் சாந்தி...

12/02, தொட்டியடி,
விசுவமடு.

குடும்பத்தினர்

## தனிமைப்படுத்தலை...

இந்தக் கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்ததாவது 5 ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தொற்றுக்குள்ளானவர்கள் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது.

தனிமைப்படுத்தப்பட்டுள்ளோருக்கு பத்தாயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொதிகள் அந்தந்த பிரதேச செயலர் ஊடாக வழங்கி வைக்கப்படுகின்றன. ஆயினும் தனிமைப்படுத்தலில் உள்ளோர் வெளியில் நடமாடுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விடயம் தொடர்பில் ஆளுநர் கவனம் எடுக்குமாறு தெரிவித்துள்ளார்.

சுகாதாரப் பிரிவினர் மற்றும் பொலிஸாரை மீறி அவர்கள் வெளியில் நடமாடுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. எனினும் எதிர்வரும் நாள்களில் அதனை கட்டுப்படுத்தவுள்ளோம்.

தனிமைப்படுத்தப்பட்டவர்கள் வெளியில் நடமாடாதவாறு இராணுவம் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் சுகாதாரப் பிரிவினர் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் முகமாகவே இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது, என்றார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்ததாவது,

டிசெம்பர் மாதம் வரையில் கொரோனா கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. எனினும் மருதனார்மட தொற்றாளர் இனங் காணப்பட்ட பின்னர் நிலைமை சற்று வேகமாக அதிகரித்து செல்கின்றது. நேற்றுவரை 106பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். அத்தோடு 102 பேர் மருதனார்மடம் கொத்தணியோடு சம்பந்தப்பட்டுள்ளார்கள்.

பொதுமக்களின் பாதுகாப்புக்காக அனைத்து சந்தைகளையும் தற்காலிகமாக மூடி வைத்து இருக்கின்றோம். அத்தோடு சந்தை வியாபாரிகள் மட்டுமல்லாது சந்தைக்கு காய்கறி வாங்க வந்தவர்கள் தொடர்பிலும் நாங்கள் அவதானம் செலுத்தியுள்ளோம்.

சந்தைக்குச் சென்று வந்தோம் என எம்மிடம் வந்து பதிவு மேற்கொண்டு பி.சி. ஆர். சோதனை மேற்கொண்டவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அத்துடன் அவரது குடும்பத்தினருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

தனிமைப்படுத்தப்பட்டுள்ளோருக்கு முதலாவது பி.சி.ஆர். பரிசோதனையில் சில வேளைகளில் தொற்று இல்லை என்று காண்பிக்கும். சில வேளைகளில் இரண்டாவது பரிசோதனையின் போது தொற்று உள்ளதாக காண்பிக்கும். இரண்டாவது பரிசோதனை முடிவுகளின்படியே அனைத்தையும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

தனிமைப்படுத்தப்பட்டோர் விரைவில் அதை நிறைவு செய்யவுள்ளனர். வருகின்ற திங்கட்கிழமை அளவில் நாங்கள் அவர்களுடைய பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின்படி அவர்களை சிலவேளைகளில் விடுவிக்க முடியும். எதிர்வரும் மூன்று அல்லது நான்கு நாள்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளோரை மிகவும் அவதானமாக கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது அவசியம்.

தனிமைப்படுத்தலில் உள்ளோர் வெளியில் நடமாடாதவாறு கட்டுப்படுத்துவதற்கு இராணுவம் மற்றும் பொலிஸாரின் உதவியை நாங்கள் கோரியுள்ளோம்.

பிரதேசத்தை ஏன் முடக்கவில்லை என்ற கேள்வியும் உள்ளது. நாங்கள் ஒரு பிரதேசத்தை முடக்கினால் அந்த பிரதேசத்தில் உள்நுழையும் பகுதிகளில் மாத்திரம் வீதித் தடைகளைப் போடுவோம். ஆனால் உள்ளே உள்ளவர்கள் அனைவருடனும் பழகுவார்கள். தமது அன்றாட செயற்பாட்டை மேற்கொள்வார்கள். அவ்வாறு ஏற்படும் போது அங்கே உள்ள அனைவருக்கும் தொற்று பரவக்கூடிய சாத்தியக்கூறு காணப்படும். இதன் காரணமாகத்தான் முடக்கல் நிலையை ஏற்படுத்த நாங்கள் விரும்பவில்லை. தனிமைப்படுத்தலே சரியான வழியாகும். தனிமைப்படுத்தி உள்ளோர் வெளியில் நடமாடுவதைக் கட்டுப்படுத்தல் என்பது மிகவும் முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றது-என்றார். (ஒ-111)

## பூட்டு....

ஸ்மஸ் பண்டிகை கொண்டாடப்படவுள்ள நிலையில் மதுபான நிலையங்களை மூட வேண்டும் என்று சுகாதாரத்துறையினர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மதுபான விற்பனைக்கு அனுமதி பெற்று நடத்தப்படுகின்ற ஹொட்டல்களில் வழமை போன்று வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

## ஜனநாயக...

க்கின்றது. அதன் வெளிப்பாடே 'உதயன்' மீதான வழக்கு. இது இந்த அரசின் ஜனநாயக விரோத செயலாகும். பிரதான எதிர்க்கட்சி என்ற ரீதியில் இதை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ வெளியிட்டுள்ள கண்டனத்தில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

'உதயன்' பத்திரிகை மீது வழக்குத் தாக்கல் செய்தமைக்கு பொலிஸார் முன்வைத்துள்ள காரணம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இது ஊடக சுதந்திரத்தை - கருத்துச் சுதந்திரத்தை மழுங்கடிக்கும் செயலாகும்.

யார் ஆட்சிப்பீடத்தில் இருந்தாலும் ஊடகங்களுக்கான சுதந்திரம் மிகவும் அவசியம். அந்தச் சுதந்திரத்தை எவரும் சட்டங்கள் கொண்டு அடக்க முடியாது.

கடந்த நல்லாட்சியில் ஊடகங்களின் கருத்துச் சுதந்திரம் பேணிப் பாதுகாக்கப்பட்டது. ஆனால், இந்த ஆட்சியில் ஊடகங்களின் கருத்துச் சுதந்திரம் திட்டமிட்டுப் பறிக்கும் செயல்கள் இடம்பெறுகின்றன. இதற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்து குரல் கொடுக்கும்-என்றுள்ளது. (எ-22)

## சர்வாதிகாரம்...

மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது இந்த அரசின் சர்வாதிகார ஆட்சியின் உச்சக்கட்ட வெளிப்பாட்டைக் காட்டியுள்ளது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க வெளியிட்டுள்ள கண்டனத்தில் தெரிவித்துள்ளார்.

அதில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: பிரபாகரனின் பெயரை நாடாளுமன்றத்தில் ஆளுந்தரப்பினரே அதிகளவில் உச்சரித்து வருகின்றனர். இந்தநிலையில், பிரபாகரனின் பிறந்த தினமன்று அவரின் படத்துடன் செய்தி வெளியிட்டமைக்காக 'உதயன்' மீது பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

பத்திரிகைச் சுதந்திரம் மீது கைவைப்பதற்குப் பொலிஸாருக்கு எந்த அதிகாரமும் இல்லை. அந்த அதிகாரத்தைப் பொலிஸாருக்கு வழங்கவும் இந்த அரசுக்கு அனுமதியில்லை.

பத்திரிகைகள் உள்ளிட்ட ஊடகங்களை ஒடுக்குவதில் இந்த அரசு முழுமூச்சுடன் செயற்படுகின்றது. இதற்கு நாம் ஒருபோதும் அனுமதி வழங்கமாட்டோம்" என்றுள்ளது. (எ-22)

## எம்.ஓ.எச்....

தினம் இடம்பெற்றுள்ளது.

ஈழத்துச் சிதம்பரத்தில் இடம்பெறும் திருவெம்பாவை உற்சவத்துக்கு நீதிமன்றால் பெயரிடப்பட்டவர்கள் மாத்திரமே தற்போது அனுமதிக்கப்படுகின்றனர். இந்த நிலையில் வர்த்தகர் ஒருவர் கொழும்பிலிருந்து வந்து, பெயர்ப் பட்டியல் ஒன்றுடன் மருத்துவ அதிகாரியைச் சென்று சந்தித்துள்ளார். தனது பெயர்ப் பட்டியலில் உள்ளவர்களையும் அனுமதிக்குமாறு அவர் கோரியுள்ளார். அதன் போது நீதிமன்ற உத்தரவை மருத்துவ அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் கொழும்பிலிருந்து வந்தால் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் வர்த்தகருக்கு கூறியுள்ளார்.

இதனையடுத்து திரும்பிச் சென்ற வர்த்தகர் நேற்றுமுன்தினம் காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்கு வந்து மருத்துவ அதிகாரியை அச்சுறுத்தியுள்ளார். இது தொடர்பில் சுகாதார மருத்துவ அதிகாரி ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஒ-5)

## கொத்தமல்லி....

கழிவுப் பொருள்கள் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

முன்னதாக பிரிட்டனில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களில் கழிவுப் பொருள்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு சர்ச்சைகளைத் தோற்றுவித்திருந்த நிலையில், இந்தக் கொள்கலன்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

8 இறக்குமதியாளர்களால் உக்ரைனிலிருந்து இந்தக் கொள்கலன்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. உக்ரைனிலுள்ள நிறுவனத்தால் இந்த கொள்கலன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

கடந்த 10 ஆம் திகதி இந்த 8 கொள்கலன்களும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. மேலும் 20 கொள்கலன்கள் 21ஆம் திகதி இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தக் கொள்கலன்களில் கொத்தமல்லி இருப்பதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பெறுமதி, வரி நீங்கலாக 756 இலட்சம் ரூபாவாகும். கொள்கலன்களில் நான்கு கொள்கலன்கள் நேற்று மாலை சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. கொள்கலன்களில் விவசாயக் கழிவுகள் இருப்பது கண்டறியப்பட்டது.

இறக்குமதியாளர்கள் மோசடியில் சிக்கியுள்ளார்களா என்பது தொடர்பாக ஆரம்பகட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என சுங்க ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன குறிப்பிட்டார்.

இலங்கை சுங்கத்தின் சட்டங்களுக்கு அமையவும், சுற்றாடல் சட்டத்துக்கு அமையவும், தவறு பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் அவற்றை இலங்கைக்கு இறக்குமதி செய்யவோ வைத்திருக்கவோ முடியாது. அவற்றை மீண்டும் உக்ரைனுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

## எம்.ஜி.ஆர்...

உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலியும் செலுத்தப்பட்டது. எம்.ஜி.ஆரின் நண்பரும், அவரது ரசிகருமான யாழ்ப்பாணம் கோப்பாயைச் சேர்ந்த எம்.ஜி.ஆர். சுந்தரலிங்கம் மாலை அணிவித்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், கோப்பாய் பிரதேச சபை உறுப்பினர் இரா சேந்திரம் செல்வராஜா உட்பட எம்.ஜி. ஆரின் ரசிகர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ-ரி5)

## விலங்குக்கு...

விலங்குகளை வேட்டையாடுவதற்காக வைக்கப்பட்ட மின் இணைப்பில் சிக்கியே மகாகச்சகொடியவில் வசிக்கும் அச்சிந்த திஸாநாயக்க (வயது-34) என்பவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிவில் பாதுகாப்புப் படைச் சிப்பாய் காட்டு விலங்குகளைத் துரத்தச் சென்றபோது இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த பாதுகாப்பற்ற மின் இணைப்புகளை அமைத்தவர் யாரென இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இது தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று மாமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோரின் விசாரணையின் பின்னர் சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. (எ-ஒ-110)

## விடுதி....

அங்கிருந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த விடுதியில் சமூகப் பிறழ்வான நடவடிக்கைகள் நடைபெறுகின்றன என்று கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே பொலிஸார் இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

விடுதி உரிமையாளர் உட்பட இரு ஆண்களும், இரு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-26)

## ஒட்டோ....

என்பவரே உயிரிழந்துள்ளார். வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது முச்சக்கரவண்டி கால்வாய்க்குள் தடம்புரண்டது என்றும், அதில் இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, இளைஞன் உயிரிழந்த செய்தி அறிந்த அவரது தந்தை கூரிய ஆயுதத்தால் தனது கழுத்தை அறுக்க முயன்றார் என்றும், அவர் அயலவர்களால் காயத்துடன் காப்பாற்றப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றும் கூறப்படுகின்றது. இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் கிளிநொச்சி பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-113,21,6)

# வெளிநாடுகளில் உள்ளோர் வாக்களிக்க விசேட ஏற்பாடு

கொழும்பு, டிசெ.25

**வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் வாக்களிப்பதற்குத் தேவையான நடைமுறைகள் ஆராயப்படவுள்ளன என ஆணைக்குழு தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.**

மேலும், வெளிநாடுகளில் சுமார் 2 மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்கள் தொழில் புரிகின்றனர். அவர்களின் பெயர்கள் வாக்காளர் இடாப்பில் உள்ள போதிலும், அவர்களுக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை.

அத்துடன், அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோருக்கு முற்கூட்டியே வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் புதிய நடைமுறைகள் தயாரிக்கப்படவுள்ளன. வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதார தரப்பினர், ஊடகவியலாளர்கள், வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்கள், சிறைக்கைதிகள் உள்ளிட்டோருக்கும் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியுள்ளது. இவர்கள் தேர்தலுக்கு முற்கூட்டியே வாக்களிப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்கும் நடைமுறையை சட்டத்தில் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கான புதிய நடைமுறைகளைத் தயாரிப்பதற்காக, தெரிவுக்குழுவொன்றை நியமிக்குமாறு நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள் ளோம் எனவும் ஆணைக்குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். (ந-இ)

## கொரோனா காவு 185 ஆக உயர்வு!

கொழும்பு, டிசெ.25

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்துள்ளார்.

அகலவத்தை பகுதியைச் சேர்ந்த 60 வயதான ஆண் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

பிம்புர ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குறித்த நபருக்கு, கொரோனாத் தொற்றுடன் இரத்தம் விஷமாகியமையே உயிரிழப்புக்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 185 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 172 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்றும் 588 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.


கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 35 ஆயிரத்து 548 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 39 ஆயிரத்து 226 ஆக அதிகரித்துள்ளது. (எ-22)

## பேராசிரியர் தொ.பரமசிவன் இயற்கை எய்தினார்

சென்னை, டிசெ.25

தமிழர் பண்பாட்டு மானுடவியல் துறையில் புரட்சிகரமான ஆய்வுகளை நடத்திய தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் தொ.பரமசிவன் நேற்று இயற்கை எய்தினார்.

மாக்ஸிய - பெரியாரிய பார்வை கொண்ட பேராசிரியர் தொ.பரமசிவன் தமிழ் ஆய்வுச் சூழலில் புதிய பார்வையைத் தொடக்கிவைத்தவராவார்.



தமிழர் பண்பாடு குறித்த மாற்றுப் பார்வையை முன்வைத்த இவர், அறியப்படாத தமிழகம், சமயங்களின் அரசியல், அழகர் கோயில், தெய்வம் என்பதோர், இந்து தேசியம், மஞ்சள் மகிமை எனப் பல ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். இந்த நூல்கில் தமிழர்களது பண்பாடு சார்ந்த பார்வை, அடிநிலை மக்களை அவதானிப்பதிலிருந்தும் ஆய்வுக்குட்படுத்தப்படுவதிலிருந்தும் மீள்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியவராவார்.

கடந்த சில மாதங்களாக சிறுநீரக நோய் காரணமாகப் பாதிக்கப்பட்ட நிலையில், அவரின் சொந்த ஊரான தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாளையங்கோட்டை கிராமத்தில் வசித்து வந்தார். தற்போது ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக அதிக உடல்நிலைப் பாதிப்புக்குள்ளான அவர், நேற்று மாலை இயற்கை எய்தினார்

இவரின் இழப்பானது தமிழ் ஆய்வுத்துறைக்குப் பேரிழப்பாகும். இவரது மறைவுக்குப் பலரும் தம் அஞ்சலிகளைத் தெரிவித்துவருகின்றனர். (எ)

## அரசமைப்பு ஊடாக சூழலைக் காக்க கோரிக்கை

கொழும்பு, டிசெ.25

காடுகளை பாதுகாக்கும் திட்டமொன்றை அரசமைப்பின் பிரகாரம் உருவாக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என பேராயர் கர்த்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார். கிறிஸ்மஸ் காலத்தை முன்னிட்டு வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில் பேராயரை அவரது இல்லத்தில் வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன சந்தித்தார். இதன் போதே



அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். சுற்றுச்சூழல் அமைப்பு முறைமை பாதுகாக்கப்பட்டால், நாட்டின் நீர்வளமானது எதிர்காலத்தில் நாட்டின் முக்கிய வருமான ஆதாரமாக மாறும். தாவரங்களை அழிப்பவர்களை கடுமையாக தண்டிப்பதற்கான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் நாட்டின் சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)

## பிறந்தநாள் கொண்டாடிய குடும்பத்துக்கு தனிமை

கிளிநொச்சி, டிசெ.25

பிரதேச சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை மீறி பிறந்த நாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட குடும்பம் ஒன்று தனிமைப் படுத்தபட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி சுகாதார மருத்துவ அதிகாரியின் எல்லைக்கு உட்பட்ட கரந்தாய்ப் பகுதியில் பிறந்தநாள் கொண்டாட்டம் ஒன்று நடைபெற உள்ளது என சுகாதாரத்துறை அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து அங்கு சென்ற அதிகாரிகள், அதிகளவில் மக்கள் கலந்துகொள்ளக் கூடாது என்றும் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்திவிட்டுச் சென்றுள்ளனர். இந்த நிலையில் மிகப் பெரியளவில் கொண்டாட்டம் இடம்பெறுகிறது. வெளி மாவட்டங்களிலிருந்தும் நபர்கள் கலந்துகொண்டுள்ளனர் என சம்பவ தினத்தன்று இரவு மீளவும் சுகாதார அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதையடுத்து பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் தகவல் வழங்கப்பட்டும் அவர்கள் உடனடியாக எந்த நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை எனத்தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை சுகாதார அதிகாரிகள் அங்கு சென்று பார்த்தபோது பெரிய அளவில் கொண்டாட்டம் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது. அந்த இளைஞர் வீதி திருத்தப் பணியில் ஈடுபடும் நபர் என்பதால் உடனடியாக அந்தக் குடும்பம் தனிமைப் படுத்தப்பட்டுள்ளது. நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் தொடர்பான தகவல்களும் திரட்டப்பட்டு வருகின்றன என சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (வ-6)

## கட்டுப்பாடற்ற வேகம்: இளைஞன் படுகாயம்!

வவுனியா, டிசெ.25

வேகக்கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் மரத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளைச் செலுத்திவந்த இளைஞன், 50 மீற்றர் தூரம் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தார்.

வவுனியா பூங்கா வீதியில் யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்துக்கு அருகாமையில் நேற்று மதியம் 2.15 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நூலக வீதியூடாக புகையிரத நிலைய வீதி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள், யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்துக்கு அருகாமையில் கட்டுப்பாட்டையிழந்து வீதியில் அருகேயிருந்த மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

மரத்தடியிலிருந்து சுமார் 50 மீற்றர் தூரம் வரை மோட்டார் சைக்கிளும் அதன் சாரதியும் தூக்கி வீசப்பட்டனர். (எ-ஒ-18)

**விற்பனைக்கு**

கிரவல், மணல், சல்லி, 6x9 கல்லு, சிப்ஸ், கலவன், ABC மற்றும் கட்டட தேவைக்கான அனைத்துப் பொருட்களும் மலிவாக பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:076 008 5855, 075 500 0099

**மாபிள்ஸ்**

ரெறாசோ (Terrasso) மாபிள் பதித்தல்
கிறனைற் (Granite) சமையலறைத் தட்டு, நில வேலைகள்
நவீன முறையில் செய்து தரப்படும்
Since-1952
தொடர்பு: 021 225 0186, 077 355 3372, 077 630 6733
தொல்புரம்.